நூலகத்திற்கு ... மாநகர் சபை, யாழ்ப்பாணம்

பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 பங்குனி 27 வியாழக்கிழமை (09.04.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:134


# பாதுகாப்பு வலயத்தில் இரத்தக்களரி அபாயம்!

## இறுதி நடவடிக்கையை இடைநிறுத்த ஐ.நா. அவசர கோரிக்கை

கொழும்பு, ஏப்ரல் 09

வன்னியில் பொதுமக்கள் தங்கியுள்ள பாதுகாப்பு வலயப் பகுதியில் பெரும் இரத்தக்களரி ஏற்படக்கூடிய அபாயம் தென்படுகின்றது என ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்திருக்கின்றது.

பொதுமக்களின் பாதுகாப்புக்காக, தற்காலிக மோதல் இடைநிறுத்தம் குறித்த பேச்சுகள் அடிபட்டுக் கொண்டிருக்கின்ற இந்தச் சந்தர்ப்பத்தில், பாதுகாப்பு வலயம் மீதான தனது இறுதி நடவடிக்கையை அரசு இப்போதைக்கு ஆரம்பித்துவிடக்கூடாது என்று ஐ.நாவின் மனிதாபிமான விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளர் நாயகம் ஜோன் ஹோம்ஸ் அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்திருக்கிறார்.



(15 ஆம் பக்கம் பார்க்க)

## பாணின் விலை ஒரு ரூபா குறைப்பு

யாழ்ப்பாணம், ஏப்.9

குடாநாட்டில் பாணின் விலையில் ஒரு ரூபா குறைக்கப்பட்டுள்ளதாக அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

இதுவரை காலமும் 44ரூபா பிரகாரம் விற்பனைசெய்யப்பட்ட பாண் நாளை தொடக்கம் 43 ரூபாவாக விற்பனை செய்யப்படும்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

தரம் - 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கென 'உதயன்' வழங்கும்
**கல்விச் சுடர் இணைப்பிதழ் உள்ளே**

## வன்னியிலுள்ள மக்களைப் பாதுகாக்க ஐ.நா. செயலரும் அரசிடம் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 09

வன்னிப் பகுதியில் பாதுகாப்பு வலயம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகாமலிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை இலங்கை அரசு எடுக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ மூன் வலியுறுத்தியிருக்கின்றார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நான் பல தடவைகள் பேசியுள்ளேன்.

நான் எனது பிரதிச் செயலாளர் நாயகம் ஜோன் ஹோம்ஸையும் இலங்கைக்கு அனுப்பியுள்ளேன்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றைய ஆட்லறி, பல்குழல் தாக்குதல்களில் 31 பேர் பலி; 75க்கும் அதிகமானோர் காயம்

கொழும்பு, ஏப்.9

வன்னியில் மக்கள் வாழ்விடங்களை நோக்கி நேற்று சிறிலங்கா படையினர் நடத்திய ஷெல், வான் மற்றும் தொலை தூர துப்பாக்கிச் சூட்டுத் தாக்கு தல்களில் 3 குழந்தைகளும் 11 சிறுவர் களும் உட்பட 31 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 75-க்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதிகளான மாத்தளன், அம்பலவன்பொக்கணை, இடைக்காடு, முள்ளிவாய்க்கால் மற்றும் வலைஞர்மடம் ஆகிய (15 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் போரை நிறுத்தக் கோரி கருணாநிதி தலைமையில் இன்று பேரணி

### சோனியாவுக்கும் சிங்குக்கும் அவசர தந்தி

சென்னை, ஏப். 09

இலங்கையில் உடனடியாகப் போரை நிறுத்தக் கோரி சென்னையில் முதல்வர் கருணாநிதி தலைமையில் இன்று வியாழக்கிழமை பேரணி நடைபெற உள்ளது.

இலங்கையில் போர் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. 20 சதுர கிலோமீற்றருக்குள் விடுதலைப் புலிகள் முடக்கப்பட்டுள்ளனர். அவர்களுடன் 2 லட்சம் அப்பாவித் தமிழர்களும் (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதத்தைக் கைவிட்டுச் சரணடைய புலிகளுக்கு இறுதிச் சந்தர்ப்பம்!

### இராணுவம் நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஏப்ரல் 09

வன்னியில் பாதுகாப்பு வலயத்திற்குள் அகப்பட்டுள்ள விடுதலைப் புலிகளை சரணடையுமாறு இராணுவத்தினர் நேற்று இறுதி வேண்டுகோளை விடுத்துள்ளனர் என இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

பாதுகாப்பு வலயத்திற்கு அருகில் உள்ள பகுதிகளிலிருந்து ஒலிபெருக்கி மூலம் படையினர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

ஆயுதங்களைக் கைவிட்டு சரணடையுமாறும், பொது மக்களை விடுவிக்குமாறும் விடுதலைப் புலிகளை இராணுவம் கோரியுள்ளது.

''நாங்கள் உண்மையை தெரிவித்து விட்டோம். விடுதலைப் புலிகள் பொது மக்களை பிடித்து வைப்பதை நிறுத்த வேண்டும்; வந்து சரணடைய வேண்டும் என வேண்டுகோளை விடுத்துள்ளோம்'' என இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார (16 ஆம் பக்கம் பார்க்க)

## புல்மோட்டைக்கு நேற்று கப்பலில் 536 பேர்

கொழும்பு, ஏப்.9

வடக்கே இடம்பெறும் போர்ச் சூழலின் விளைவாக முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுமாத்தளன் பகுதியிலிருந்து 'கிறீன் ஓசன்' கப்பல் (16 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா ரயில் சேவை நேற்று மீண்டும் ஆரம்பம்

கொழும்பு,ஏப்.09

தமிழ்,சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு யாழ் தேவி ரயில் நேற்று மீண்டும் வவுனியா வரைக்கும் சேவையில் ஈடுபட்டது. பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு இச் சேவை (16 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலயத்தில் நேற்று வெடிச்சத்தம்

கொழும்பு, ஏப். 09

பாதுகாப்பு வலயத்தினுள் சிக்கியுள்ள பொதுமக்களை விடுவிக்குமாறு பாதுகாப்பு படையினர் இறுதி அறிவித்தல் விடுத்த பின்னர் பல (16 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா முகாம்களில் உள்ளவர்களின் நிலை குறித்து ஐ.நாவின் பிரதிநிதி கவலை

### பாதுகாப்பு வலயத்தில் உள்ள மக்கள் தொடர்பிலும் அவர் கரிசனை

கொழும்பு, ஏப்.9

இலங்கையின் வடக்கே மோதல்கள் நடைபெறும் பகுதிகளிலிருந்து வெளியேறி தற்போது வவுனியாவில் இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ளவர்களின் நிலை குறித்து தாங்கள் கவலை கொண்டுள்ளனர் என இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதி நீல் புஹுனே பி.பி.ஸிக்குத் தெரிவித்துள்ளார்.

அங்குள்ள முகாம்களுக்கு விஜயம் செய்துவிட்டு வந்த பின்னரே இந்தக் கருத்தை அவர் வெளியிட்டுள்ளார். அங்கு குறைந்த நிலப்பரப்பில் பலர் தங்க வைக்கப்பட்டிருப்பது அங்குள்ள மக்களிடையே ஒரு விரக்தியை ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

எனினும் அரசு அங்குள்ள மக்களுக்கு உணவு (16 ஆம் பக்கம் பார்க்க)

### இந்தியா போரை உடனடியாக நிறுத்தாவிட்டால்

## அரச அலுவலகங்களை முடக்கும் வகையில் தமிழகத்தில் பெரும் போராட்டங்கள் வெடிக்கும்

சென்னை, ஏப்ரல் 09

இலங்கையில் நடைபெற்றுவரும் போரை இந்திய அரசு தலையிட்டு நிறுத்தாவிட்டால் தமிழகத்தில் இயங்கிவரும் அனைத்து அரச அலுவலகங்களையும் முடக்கும் வகையில் பெரிய அளவிலான போராட்டத்தை ஈழத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் முன்னெடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (16 ஆம் பக்கம் பார்க்க)

## அடிகாயங்களுடன் சடலம் உறுகாமம் பகுதியில் மீட்பு

கொழும்பு, ஏப்.9

மட்டக்களப்பு மாவட்டத்தின் உறுகாமம் மீள்குடியேற்றக் கிராமத்தில் மீன்பிடிக்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் அடித்துக் கொலைசெய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (16ஆம்பக்கம்பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்**

# செஞ். சங்கப் பணியாளர் நேற்று ஷெல் வீச்சில் பலி!

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள' மக்கள் பாதுகாப்பு வலய' பகுதியில் நேற்று நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பணியாளர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அறிக்கை ஒன்றினை நேற்று புதன்கிழமை மாலை வெளியிட்டுள்ளது.

கடற்கரையோரமாகவுள்ள அம்பலவன் பொக்கனை என்ற இடத்தில் தனது குடும்பத்தினருக்காக குடிதண்ணீர் எடுத்துவரச் சென்றிருந்த போதே இவர் ஷெல் வீச்சுக்கு இலக்கானார் என்றும், சம்பவ இடத்திலேயே அவர் கொல்லப்பட்டார் என்றும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தெரிவித்துள்ளது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் உள்ளூர் பணியாளரான சின்னத்துரை குகதாசன் என்பவரே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார். திருமணமான இவருக்கு மூன்று பிள்ளைகள் இருக்கின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

# திருமலையில் விபத்துக்குள்ளான கப்பலில் இருந்த சிப்பந்திகள் மீட்பு

திருகோணமலையை அண்மித்த கடல் பிரதேசத்தில் விபத்துக்குள்ளான துருக்கி கப்பல் சிப்பந்திகள் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர் என இலங்கை கடற்படை தெரிவிக்கின்றது.

துருக்கியிலிருந்து தூத்துக்குடி துறைமுகம் நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் கப்பலில் ஏற்பட்ட கோளாறு காரணமாக அது விபத்திற்குள்ளானது. இக்கப்பலில் 6,250 மெற்றிக்தொன் எடையுடைய சல்பியூரிக் அமிலம் களஞ்சியப் படுத்தப்பட்டிருந்தது எனத் தெரிவிக்கப் படுகின்றது.

இதன் காரணமாக அந்தப் பிரதேசத்தின் சுற்றாடல் வெகுவாக மாசடையக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது என சமுத்திரவள பாதுகாப்பு அதிகார சபை கூறுகின்றது.சூழல் மாசடைவதைத் தவிர்க்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

## கண்ணீர் அஞ்சலி



பனை அபிவிருத்திச் சபைத் தலைவர்
திரு.சங்கரப்பிள்ளை சிவதாசன்
அவர்களின் துணைவியார்
அமரர்
**சிவகுணநாயகி சிவதாசன்**

அவர்கள் 07.04.2009 அன்று காலமானதால் துயருற்றிருக்கும் தலைவர் அவர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

பணியாளர் நலன்புரிச் சங்கம்,
பனை அபிவிருத்திச் சபை.

உயிரோடிருக்கும் போது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பவர்கள் என்றுமே இறப்பதில்லை - தூய யோவான் 11:26

## நன்றியுடன் நினைவு கூருகின்றோம்

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை முன்னாள் அதிபர், நயினாதீவு, நவாலி , ஆனைக்கோட்டை திருச்சபைகளின் முன்னாள் ஊழியர், மானிப்பாய் நவாலி வை.எம்.சீ.ஏக்களின் முன்னாள் தலைவர் மற்றும் கூட்டுறவாளருமான

**உவில்லியம் ஞானசிகாமணி அன்னப்பா**

தோற்றம் 18 - 07 - 1918



மறைவு 09 - 04 - 1990

கல்லூரி வீதி,
வட்டுக்கோட்டை

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
மைத்துனர், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### தம்பிப்பிள்ளை சின்னையா(தையிட்டி)

(முன்னாள் கூட்டுறவுப் பரிசோதகர்)



தையிட்டியைப் பிறப்பிடமாகவும் விளிசிட்டி, ஏழாலை தெற்கு, சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை சின்னையா கடந்த 07.04.2009 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் இரண்டாவது புதல்வனும் அழகம்மாவின் அன்புக் கணவரும் ரவீந்திரனின்(சுவிஸ்) அன்புத் தந்தையும் பிரவீன், பிரசானி ஆகியோரின்அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், மாணிக்கம், சின்னம்மா மற்றும் சின்னத்துரை (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும்ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (09.04.2009) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் ஏழாலை உசத்தியோடை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விளிசிட்டி,
ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.

தகவல்:
அழகம்மா
(மனைவி).

# டென்மார்க்கில் 83 தமிழர்கள் கைது

கொழும்பு, ஏப்.9

டென்மார்க்கில் அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சுக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 83 தமிழர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் இடம்பெறும் மோதல்களிற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று மாலை 5 மணிவரை டென்மார்க் வெளிவிவகார அமைச்சின் முன் தமிழர்கள் போராட்டம் நடத்த பொலிஸார் அனுமதி வழங்கி இருந்தனர்.

எனினும், குறித்த நேரத்தின் பின்னர் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் வெளியேற மறுத்ததையடுத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன. (சி)


## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 70 ஆம் ஆண்டு, விசாகம், 4 ஆம் பாதம், கிரகபாவம் 42, 8 இல் செவ்வாய் அமெரிக்கா வங்கியில் Account ஆக கடமை புரியும் மணகனுக்கு ஆங்கில அறிவுடைய அழகிய Doctor or Engineer மணமகள் தேவை.

தொடர்பு: 077684434, 0778501013,
E.mail: vaniimb@yahoo.com

## சோதிடம்

கல்வியில் சித்தியா?, உத்தியோகம் கிடைக்குமா?, வியாபாரம் விருத்தியாகுமா?, திருமணம் நிகழுமா?, வெளிநாடு போகலாமா?, நோய் நீங்குமா?

ஆமாம்! உங்கள் வினாக்கள் எவையானாலும் உரிய விடை உடனே தரப்படும்.

ஜாதகம், கைரேகை, எண் விஞ்ஞானம் ஆகியவற்றின் ஆதாரத்துடன் உங்கள் பலன்களை தெளிவாக அறிந்திட இன்றே நாடுங்கள்!

டாக்டர் த. சிவானந்தன்
பிரபல சோதிடர், 5, வைமன் வீதி, நல்லூர்.

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA புறொயிலர் குஞ்சுகள் PIRIMA சிவப்பு, வெள்ளை பேட்டுக்குஞ்சுகள் 09.04.2009 இன்று மாலை விநியோகிக்கப்படும்.

- றாஜீவ்- நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
- பி.ரவி - சாவகச்சேரி.
- சிற்றிபாம்- கல்வியங்காடு.
- மதுரா- அஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## C.C.A

சுன்னாகம்

## A/L 2009

கலை, வர்த்தகம்

| | |
|---|---|
| தமிழ் -பத்மநாதன் | வரலாறு-சுதன் |
| நாடகம் -கணேஸ். | விவசாயம் -கஜன் |
| அளவையியல் -சயந்தன் | கிறிஸ்தவம் - யூட் |
| புவியியல் -பாபு | ம.பொருளியல் -கஜந்தினி |
| இ.நாகரிகம் -சுரேஸ் | கணக்கீடு -சீலன் |
| அரசியல் -சந்துரு | பொருளியல் -ரூபன் |
| | வணிகக்கல்வி - மோகன் |

ஆரம்பம் - 11.04.2009 (சனி) 8 a.m.

e.com
Computer Learning Center

ன் விடுமுறைக்காலக் கணினிக் கற்கைநெறிகள்

பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகளின் விடுமுறைக்காலத்தினை பயனுள்ளதாக்க இதோ! நாம் வழங்கும் சர்வதேச தரச் சான்றிதழுடன் கூடிய

சிறுவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான விசேட விடுமுறைக்காலக் கணினிப் பயிற்சி நெறிகள்.

ஆரம்பம் : 09/04/2009, 10/04/2009, 11/04/2009, 12/04/2009

மேலதிக விபரங்களுக்கு:
Tel: 0776544709
No.95A Temple Road, Nallur, Jaffna.
No.95 Thavady South, Kokuvil, Jaffna.


## மரண அறிவித்தல்கள்

### அந்தோனிப்பிள்ளை இராஜசீலன் (நிமலன்)



புதுக்குடியிருப்பு, 8 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை (அப்பாத்துரை) - மார்க்கிரட் தம்பதியரின் புதல்வனும் அல்வாய் வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற கோ.சிவபாதபுண்ணியம் - நாகேஸ்வரி தம்பதியரின் மருமகனும் இ.மலர்விழி (கண்ணா)யின் அன்புக் கணவரும் ஆதிஷன், ஐஸ்ணா ஆகியோரின் பாசமிகு தந்தையுமான அந்தோனிப்பிள்ளை இராஜசீலன் டோகா கட்டாரில் கடந்த 03.04.2009 அன்று காலமானார்.

அன்னாரின் ஆத்ம ஈடேற்றத்திற்கான நல்லடக்கப் பிரார்த்தனை திருகோணமலையிலுள்ள அவரது மைத்துனர் கே. விநாயகமூர்த்தியின் இல்லத்தில் (93/1, கோட் றோட், திருகோணமலை) நடைபெறவுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

நல்லடக்கம் பற்றிய விவரங்கள் பின்னர் தெரியப்படுத்தப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நக்கீரன் வீதி,
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

தகவல்:
சி.நகேஸ்வரி,
சி.இமயவன்.

### திருமதி சின்னத்துரை நாகம்மா



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை நாகம்மா நேற்று (08.04.2009)புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரையின்(செகராச சேகரப்பிள்ளையார் ஆலய தர்மகர்த்தா, இணுவில்) அன்பு மனைவியும் சுந்தரலிங்கம்,ராஜமனோகரி,செல்வரெத்தினம், புஸ்பகாந்தி,கணேசமூர்த்தி,சிவகுமார்,(கனடா),ரவிச்செல்வம் (கொழும்)ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பு அழுத்மாவத்தையில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (09.04.2009)வியாழக்கிழமை பி.ப 4 மணியளவில் மாதம்பிட்டி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செகராச சேகரப்பிள்ளையார்
கோயிலடி,
இணுவில் மேற்கு,
இணுவில்.

தகவல்:
பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்கள்,
பேரப்பிள்ளைகள்.

### திருமதி சாவித்திரிதேவி சிவயோகநாதன்

நீர்வேலி மத்தியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சாவித்திரிதேவி சிவயோகநாதன் நேற்று (08.04.2009) புதன்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - நாகமுத்து(உசன்) தம்பதியரின் அன்பு மருமகளும் சிவயோகநாதனின்( இளைப்பாறிய ஆய்வுகூட பரிசோதகர்) அன்பு மனைவியும் சண்முகநாதன், சிவகுருநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கலைச்செல்வி(முன்னாள் ஆசிரியை, ஸ்ரீ சோமாஸ்கந்தாக் கல்லூரி,புத்தூர்), தயாபரன் (யாழ். போதனா வைத்தியசாலை கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்) ஆகியோரின் பாசமிகு தாயும் சேரலாதன் (அபுதாபி), ஜீவரேகா(ஆசிரியை, பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியும் அர்ச்சனா, அபஜிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(10.04.2009)வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நீர்வேலி சீயாக்காடு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## வன்னியில் இரத்தக்களரிப் பேராபத்து; தடுத்து நிறுத்தத் தக்கார் யார்...?

இலங்கையில் நடைபெறும் போரை நிறுத்தி, சமாதானத்தை ஏற்படுத்த நோர்வே தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக, அந்த நாட்டின் அமைச்சரும் இலங்கைக்கான முன்னாள் சமாதானத் தூதுவருமான எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்திருக்கிறார்.

தாம் மட்டுமன்றி இணைத்தலைமை நாடுகளில் ஒன்றான அமெரிக்காவுடன் சேர்ந்தும் இலங்கையில் போரை நிறுத்துவதற்குச் சாத்தியமான வழிவகைகள் குறித்து ஆராய்ந்துள்ளதாகவும் அவர் தகவல் வெளியிட்டிருக்கிறார்.

நோர்வேயின் என்.ரி.பி. செய்தி நிறுவனத்துக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வழங்கிய செவ்வியில் அவர் இவற்றைச் சொல்லியுள்ளார்.

இலங்கையில் போர் நிறுத்தம் தேவை என்பதனை சமீப காலத்தில் ஐக்கிய நாடுகள் சபை உட்பட அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம் என்ற பல தரப்புகளும் ஏற்கனவே தமது கோரிக்கையாக முன்வைத்து விட்டன.

எந்தக் ''கொம்பன்'' சொன்னாலும் போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதில் அரசாங்கம் மிக உறுதியாக நிற்கிறது; ஆணித்தரமாகக் கூறுகிறது.

அதனை 'மேவி' எதனையும் செய்ய முடியாத நிலையிலும், வற்புறுத்திச் செய்விக்க முடியாத பரிதாப நிலையிலும் ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட சர்வதேசம் கையறு நிலையில் உள்ளமை,கறுப்புக்கு மேல் வெள்ளை போன்று மிகத் துல்லியமாகத் தெரிகிறது; துலாம்பரமாகப் புரிகிறது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில், பின்னணியில் போர் நிறுத்தம் ஒன்றை வருவிப்பதற்கான முயற்சி, கல்லில் நார் உரிக்கும் கருமமே என்பது விளங்கிக் கொள்ளக் கூடிய ஒன்றே.

நோர்வே அமைச்சர் சொல்ஹெய்மின் வாயிலிருந்து வந்த பின்வரும் சொற்கள் அதனையே தொக்கு நின்று உறுதிப்படுத்துகின்றன:

இலங்கையில் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு உலகத்திலேயே தன்னால் இயன்றவரை அதிகமாக உழைப்பது நோர்வே நாடே. அதேவேளை எல்லாத் தரப்புக்களின் கண்டனத்துக்கும் ஆளாவதும் எமது தேசமே.

எங்கள் மீதான கண்டனங்கள் வாளிகளிலும் வந்து குவிகின்றன; குப்பைக் கூடைகளிலும் விழுந்து பெருகுகின்றன. நாம் தமது பிரச்சினையில் மிகக் குறைந்தளவிலேயே அக்கறை காட்டுகிறோம் என்று தமிழர்கள் குறை சொல்கிறார்கள். அதேவேளை நாம் அளவுக்கு அதிகமாக இது தொடர்பில் செயற் படுகின்றோம் என்று இலங்கை அரசாங்கம் நினைக் கிறது- என்று மனம் வெதும்புகிறார் அவர்.

எல்லோரது கவனத்தையும் ஈர்த்துள்ளதும் கவலை கொடுத்துள்ளதுமான வன்னியின் மோசமான மனிதாபிமானப் பிரச்சினையைத் தீர்ப்பதில் முதற் கவனம் தேவை என்பதனை சொல்ஹெய்மும் தமது பேட்டியில் அழுத்திக் கூறியுள்ளார்.

இலங்கையில் இன்று உருவாகியுள்ள மனிதாபிமானப் பேரவலம், உலகத்திலேயே மிகமிக மோசமானதாகும். அங்கு போரில் சிக்குண்டுள்ள மக்களுக்கு உணவு, தண்ணீர் கிடைக்காமை ஒருபுறம் இருக்க, அந்தப் பிரதேசத்தில் நடைபெறும் குண்டுத்தாக்குதல் (Bombardment) மிகமிகக் கொடுமையானதாகும். அங்கு வாழும் மக்கள் அதிலிருந்து தப்பிக்கொள்வதற்குப் பாதுகாப்பான வழிமுறை எதுவும் இல்லை -

பொது மக்கள் தங்கியுள்ள பகுதிகள் மீது தாக்குதல் நடத்த வேண்டாம் என்று இலங்கை அரசிடம் கேட்டுள்ளோம். அதேபோன்று மோதல் பிரதேசத்திலிருந்து வெளியே செல்ல விரும்பும் பொது மக்களை அனுமதிக்குமாறு விடுதலைப் புலிகளிடம் கேட்டுள்ளோம். ஆனால் எமது கோரிக்கையை இரு தரப்பினரும் கவனத்தில் கொள்ளவில்லை - என்று சொல்ஹெய்ம் மனம் நொந்துள்ளார்.

சொல்ஹெய்ம் கூறிய மனிதாபிமான நெருக்கடி பெரும் பூதாகாரமாகி, பேராபத்து நிலைக்கு வந்து கொண்டிருப்பதை இலங்கைக்கு வந்து திரும்பிய ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் நிபுணர் கலாநிதி வால்ட்டர் கலினும் எடுத்துக் கூறியுள்ளார். ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதியாக அவர் இங்கு வந்திருந்தார்.

வன்னியில் பெரும் இரத்தக்களரி ஏற்படும் பேரபாயம் தோன்றியுள்ளது. எல்லா வழிகளாலும் அந்த இரத்தக்களரி உடனடியாகத் தடுக்கப்படவேண்டும் என்று கலாநிதி வால்ட்டர் கலின் ஜெனிவாவில் செவ்வாயன்று வழங்கிய வானொலிப் பேட்டியில் வலியுறுத்தி உள்ளார்.

வன்னியில் மனிதாபிமானப் பேராபத்து, பெரும் இரத்தக்களரியாக உருமாறிக் கற்பனைக்கும் எட்டாத அளவில் தமிழர்கள் செத்துமடிவது தடுக்கப்பட வேண்டும். இதனை இரண்டு தரப்புகளுக்கும் உணர்த்துவதில் ஐ.நா., நோர்வே, அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் சக்தியுள்ள நாடுகள் அதிக சிரத்தை யும் கவனமும் எடுத்து வேகத்துடன் செயற்படுவதே இன்றைய தேவை.

அந்த வகையில், ஐக்கிய நாடுகள் சபை போன்ற அதிகாரமும் சக்தியும் மிக்க அமைப்பிடம் வன்னி மக்களின் பாதுகாப்பு ஒப்படைக்கப்படுவதே இப்போதுள்ள மனிதாபிமானப் பேரவலப் பூட்டை உடனடியாக உடைக்கக் கூடிய திறவுகோலாக அமையும்.

# இலங்கையில் போரை நிறுத்துவதற்கு நோர்வே தொடர்ந்து பாடுபடுகின்றது

## அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் சொல்கிறார்

லண்டன், ஏப்.9

இலங்கையில் போரை நிறுத்துவதற்கு போராடிவரும் முக்கியமான நாடு நோர்வேதான். அதேசமயம் பல தரப்புகளிலிருந்தும் கண்டனங்களை எதிர்நோக்கும் நாடும் அதுதான்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் நோர்வேயின் சுற்றாடல்துறை மற்றும் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம்.

நாங்கள் மிக சிறிய அளவிலேயே செயல்படுகிறோம் என்று தமிழ் மக்கள் நினைக்கின்றார்கள். நாங்கள் அளவுக்கு அதிகமாக தலையிடுகிறோம் என்று இலங்கை அரசு நினைக்கிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கடந்த செவ்வாயன்று நூற்றுக்கணக்கான தமிழர்கள் நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நாடாளுமன்றக் கட்டடத்துக்குமுன் கூடி இலங்கையில் நடக்கும் போரை நிறுத்துமாறு கோரினார்கள். இலங்கையில் இனப்படு கொலைக்குள்ளாகியுள்ள தமது உறவுகளையும், நண்பர்களையும் காப்பாற்ற நோர்வே அரசு இன்னும் அதிகமாகப் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

தமிழர்களின் கவலைகள் பற்றி நாம் முழுமையாக அறிந்துள்ளோம் - என்றார் சொல்ஹெய்ம்.

இலங்கையில் தோன்றியுள்ள மனித உரிமை நிலைமையானது உலகிலேயே மிக மோசமானதாக இருக்கின்றது. சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் அல்லது 2 லட்சம் மக்கள் ஒரு கடற்கரையில் முடக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு உணவும், தண்ணீரும் தேவைப் படுகின்றது. இதில் மோசமான நிலைமை என்னவென்றால் அங்கு குண்டுத் தாக்குல் மேற்கொள்ளப்படுகிறது. அப்பகுதியில் நடத்தப்படும் ஆட்டிலறித் தாக்குதல்களினாலும் ஏராளமானவர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள் என்றும் சொல்ஹெய்ம் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

போரை நிறுத்த நோர்வே இன்னும் அதிகமாகப் பாடுபடும் என்று சொல்ஹெய்ம் கூறியுள்ளார்.

பொதுமக்களின் துன்பங்களை நீக்குவதற்கு என்ன செய்யலாம் என்பது குறித்து ஐ.நா., ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்காவுடன் நோர்வே நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருக்கிறது என்று சொல்ஹெய்ம் கூறினார்.

(ப)

# ருபெல்லா தடுப்பு மருந்தின் தரத்தில் எவ்வித குறைபாடுகளும் இல்லை

## நாடாளுமன்றத்தில் அமைச்சர் ஸ்ரீபால டி சில்வா

கொழும்பு, ஏப்.9

இலங்கையில் வழங்கப்படும் ருபெல்லா தடுப்பூசி மருந்தின் தரத்தில் எவ்விதக் குறைபாடுகளும் இல்லை என அது தொடர்பில் நடத்தப்பட்ட பரிசோதனைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதுபற்றி அமைச்சர் மேலும் கூறியதாவது:-

மாத்தறை வைத்தியசாலையில் அண்மையில் வழங்கப்பட்ட ருபெல்லா தடுப்பூசி ஒவ்வாமையினால் பாடசாலை மாணவியொருவர் மரணமடைந்ததைத் தொடர்ந்து அது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டன. பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன.

இந்தப் பரிசோதனையின்போதே ருபெல்லா தடுப்பூசி மருந்தின் தரத்தில் எவ்விதக் குறைபாடுகளும் இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசி வழங்கும் நடைமுறையில் ஏதாவது பிழைகள் ஏற்பட்டனவா என்பதைக் கண்டறிய விசாரணைகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன.

அரசு மேற்கொண்டுவரும் தேசத்துக்கு வலுவூட்டும் திட்டங்களுக்கு எதிர்க்கட்சிகள் குந்தகம் விளைவிக்கக் கூடாது-என்றார். (50)

# விரிவுரையாளரை விடுதலை செய்யக்கோரி பல்கலைக்கழகப் பகிஷ்கரிப்புத் தொடர்கிறது

கொழும்பு, ஏப்.9

கொழும்பில் வைத்துக் காணாமற் போன யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட புவியியல்துறை விரிவுரையாளராகிய செல்வராஜா ரவீந்திரனை விடுதலை செய்ய வேண்டும் அல்லது சட்டரீதியாக அவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த வேண்டும் எனக் கோரி யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இரண்டாவது வாரமாக வகுப்புக்களைப் புறக்கணித்து வருகின்றார்கள்.

இதனால் யாழ்.பல்கலைக்கழகத்தின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டிருப்பதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான செல்வராஜா கஜேந்திரனின் சகோதரராகிய இவர், கொழும்பு மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் இருந்து அவர் தங்கியிருந்த இடத்திற்கு மோட்டார் சைக்கிளில் திரும்பிக் கொண்டிருந்தபோது கடந்த மாதம் 25 ஆம் திகதி காணாமற்போனாதாக உறவினர்கள் முறையிட்டிருக்கிறார்கள்.

இவரை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கோரி யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமும், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் தனித்தனியாக ஜனாதிபதியிடமும், பாதுகாப்பு அமைச்சரிடமும் கடிதங்கள் மூலமாக வேண்டுகோள் விடுத்திருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. (50)

# குடாநாட்டு வங்கிக் கிளைகளில் புத்தாண்டுக் கொடுக்கல் வாங்கல்

யாழ்ப்பாணம், ஏப்.9

எதிர்வரும் 14 ஆம் திகதி புதுவருடத்தினத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள வங்கிகளின் பணக்கொடுக்கல் வாங்கல்கள், கைவிசேட நிகழ்வுகள் ஆகியவற்றின் நேரங்களை வங்கி முகாமையாளர்கள் அறிவித்துள்ளனர்.

அவற்றின் விவரம் வருமாறு:-

**இலங்கை வங்கி**

சகல கிளைகளிலும் காலை 8 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை புதுவருடப் பணக் கொடுக்கல் வாங்கல் நடைபெறும்.

**தேசிய சேமிப்பு வங்கி**

சகல கிளைகளிலும் காலை 7 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை புதுவருடப் பணக் கொடுக்கல் வாங்கல் நடைபெறும்.

**செலான் வங்கி**

காலை 7 மணி முதல் பிற்பகல் 1 மணிவரை புதுவருடக் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெறும்.

**ஹற்றன் நஷனல் வங்கி**

சகல கிளைகளிலும் காலை 8 மணி முதல் 2மணிவரை பணக் கொடுக்கல் வாங்கலும் கைவிசேடம் வழங்கலும் நடைபெறும்.

**மக்கள் வங்கி**

சகல கிளைகளிலும் காலை 8 மணி முதல் பணக்கொடுக்கல் வாங்கலும் கைவிசேடம் வழங்கலும் இடம்பெறும்.

இதேவேளை-விடுமுறை தினமான இன்றும், நாளையும் மறுதினம் சனிக்கிழமையும் வாடிக்கையாளர் நலன்கருதி காலை 8.30 மணிமுதல் 2 மணிவரையும் வங்கிகள் திறந்திருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(50-9-100-207)

# வெளிநாடுகளில் நடைபெறும் போராட்டங்களில் அணிதிரள புலம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கு அழைப்பு

உலக நாடுகள் எங்கும் தமிழ் மக்கள் பேரெழுச்சி கொள்ளத் தொடங்கியுள்ள நிலையில், போராட்டத்திற்கு அணி திரண்டு வந்து ஆதரவு வழங்குமாறு அதன் ஏற்பாட்டாளர்கள் கோரியுள்ளனர்.

தமிழ் மக்கள் மீது மிக மோசமான இனப்படுகொலை கட்ட விழ்த்து விடப் பட்டுள்ள நிலையில், அதனை தொடரவிடாமல் தடுப்பதற்காக உலகம் முழுவதும் உள்ள மக்கள் ஒரே காலத்தில் பெரும் போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளார்கள் என இணையத் தளச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அச் செய்திகளில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:

அமைதியான முறையில் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்கள் எதனையும் சர்வதேசம் அக்கறையுடன் கவனத்தில் எடுக்காது தமிழினப் படுகொலையை மௌனமாக வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கும் நிலையில், தமிழ் மக்கள் தொடர் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர் என அதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

போரை நிறுத்தி வைத்து தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வை வழங்கும் வரை தொடர்ச்சியாக முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ள இப்போராட்டத்திற்கு தமிழ் மக்கள் தங்கள் தார்மீக ஆதரவை வழங்கி பல்லாயிரக்கணக்கில் அணி திரளுமாறு கோரப்பட்டுள்ளது.

உங்கள் அனைத்துப் பணிகளையும் ஒதுக்கி வைத்து இந்தப் போராட்டத்தில் பங்கேற்று வரலாற்றுக் கடமையைப் புரியுங்கள் என ஐரோப்பிய நாடுகள் உட்பட அனைத்து நாடுகளிலும் உள்ள தமிழ் மக்களை ஏற்பாட்டாளர்கள் கோரியுள்ளனர். (50)

## நாளை

| | |
|---|---|
| பங்குனி 28 | 10.04.2009 |
| | வெள்ளிக்கிழமை |
| திதி: | பிரதமை |
| | மு.இ. 08.37வரை |
| நட்சத்திரம்: | சித்திரை |
| | பி.ப. 04.27 வரை |
| சுபநேரம்: | 06.06 - 07.36 |
| ராகுகாலம்: | 10.36 - 12.06 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





# ஓராண்டு நினைவலைகள்

தோற்றம் 19 ★ 10 ★ 1921



மறைவு 21 ★ 03 ★ 2008

மதுரைப்பண்டிதர்

## கணபதிப்பிள்ளை சச்சிதானந்தன்

{B.A.(Hons) Lond., M.Phil.(Lond), Ph D.Jaffna}

கல்வியில் பல கலைகளில் ஆற்றல் பெற்று
கலங்கரை விளக்காய் நின்று
காவியங்கள், முத்தமிழ் இலக்கியங்கள் படைத்து
இலக்கண ஆய்வில் வித்தகனாய் விளங்கி
செந்தமிழும் ஆங்கிலமும் துலங்கிட
நூல் படைத்த வித்தகரே
எம் அருமைத் தந்தையே ஓராண்டு சென்றாலும்
எமதுள்ளம் உமைவிட்டகலாது.

எமது இதய தெய்வம் இறைபதம் அடைந்த ஓராண்டு நிறைவு தினமான இன்று (09.04.2009) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நிகழ இருக்கும் சிரார்த்தக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி !

திகிரி ஒழுங்கை, தும்பளை, பருத்தித்துறை,
(யா/தும்பளை சிவப்பிரகாச ம.வி. அருகில்).

மனைவி, பிள்ளைகள்.

# கண்ணீர் அஞ்சலி

சங்க அங்கத்தவர் பா.சோமசுந்தரம் அவர்களின் பாசமிகு தாய்

## திருமதி பாலசுந்தரம் லெட்சுமி

அவர்களின் மறைவையொட்டி அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சாவகச்சேரி நகர சபை ஊழியர் நலன்புரிச் சங்கம்.

## காணி விற்பனைக்கு

றக்கா வீதியில் 1½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.(பொஸ்கோ பாடசாலைக்கு அருகில்)

தொடர்பு: தொ.பே.: 021 222 6875

## மணப்பெண் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்தவருக்கு 42 வயதுக்கிடைப்பட்ட மணப்பெண் வேண்டப்படுகிறார். சீதனம் எதிர்பார்க்கப்படவில்லை. குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். படித்த குடும்பம் விரும்பத்தக்கது.

லக்கி ஆன்டி, 122, சிவன் கோயில் வீதி,
திருநெல்வேலி தெற்கு, திருநெல்வேலி.
தொ.பே.: 021 222 6366, 0771751018 (S.M.S மட்டும்)

# 45ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடிதனில் 14 ★ 02 ★ 1930



இறைவன் அடிதனில் 24 ★ 02 ★ 2009


## திருமதி கந்தையா திருஞானசக்தி

பிள்ளைகளின் பிரியமான அன்னையாய்!
மருமக்களின் மனதில் நிறைந்த மாமியாராய்!
பேரப்பிள்ளைகளின் பேரன்புமிக்க அப்பம்மா! அம்மம்மாவாய்!
இருந்த எங்கள் அன்புத் தெய்வமே!
விதியின் விளையாட்டால் எம் விழிகளில் நீர் வடிய....
உங்கள் கண்ணிமைகள் மூடியதேன்?

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் மாணிக்கம் தில்லையம்பலம்

மலர்வு 15★11★1935 உதிர்வு 09★03★2009

அன்புடன் அரவணைத்து
ஆசையாய் வளர்த்தீர் எம்மை
துன்பமாம் துயரம் நீக்கி
தூய நல்வாழ்வு தந்தீர்
இன்புறு வேளை தன்னில்
இதயமே உடைந்து நோக
சென்றதும் ஏனோ அப்பா - உம்மை
சேவித்தே என்றும் வாழ்வோம்.

09.03.2009 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வம் அமரர் மாணிக்கம் தில்லையம்பலம் அவர்களுடைய ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்தியமும் இன்று (09.04.2009) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அவ்வமயம் உறவினர்கள், நண்பர்கள் யாவரும் கலந்துகொண்டு மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

துரை வீதி,
இணுவில் தெற்கு,
இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

## கசிப்பு வழக்கில் ஒரு லட்சம் அபராதம்

சட்டவிரோத கசிப்பு வைத்திருந்த மூவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று ஒரு லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பருத்தித்துறை மதுவரித் திணைக்களத்தினரால் தாக்கல் செய்யப்பட்ட இரு வழக்குகளும் சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கும் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

சட்ட விரோத கசிப்பு வைத்திருந்த சாவகச்சேரி, கெருடாவிலைச் சேர்ந்த நபருக்கு 60 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 20 மாத சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும், மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த நபரும் 20 ஆயிரம் ரூபா அபராதமும் தவறின் 15 மாத சாதாரண சிறைத் தண்டனையும் சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியைச் சேர்ந்த நபருக்கு 20 ஆயிரம் ரூபா அபராதமும் தவறின் 10 மாத சாதாரண சிறைத்தண்டனையும் நீதிவான் விதித்தார்.

# மரண அறிவித்தல்



## திருமதி தருமரத்தினம் தங்கம்மா

புங்குடுதீவு, 8 ஆம்வட்டாரம், மடத்து வெளியைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட தருமரத்தினம் தங்கம்மா 07.04.2009 செவ்வாய்க்கிழமை வவுனியாவில் காலமானார். அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும்.

சுதுமலை மத்தி,
மதவடி, மானிப்பாய்.

தகவல்: த.செல்வராசா (செல்வன் -மகன்).

# அந்தியேட்டி அழைப்பு



அமரர் நாகநாதன் கந்தசாமி



திருமதி மாணிக்கம் ஏகாம்பரம்

கடந்த 08.03.2009 ஞாயிற்றுக்கிழமை நயினாதீவில் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி மாணிக்கம் ஏகாம்பரம் அவர்களின் அந்தியேட்டிக்கிரியை யும், 14.03.2009 சனிக்கிழமை சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவனும் நயினாதீவு கிராம சேவையாளருமான நாகநாதன் கந்தசாமி அவர்களினதும் அந்தி யேட்டிக்கிரியையும் நயினாதீவு தீர்த்தக் கரையில் இன்று(09.04.2009) வியாழக்கிழமை 6 மணிக்கு நடைபெறும். அத்தோடு திருமதி மாணிக்கம் ஏகாம்பரம் அவர்களின் வீட்டுக்கிருத்தியம் அவரின் நயினாதீவு இல்லத்திலும் நாகநாதி கந்தசாமி அவர்களின் வீட்டுக்கிருத்தியம் அவரது கோண்டாவில் இல்லத்திலும் 11.04.2009 சனிக்கிழமை நடைபெறும்.இதனை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இரு நிகழ்வுகளிலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில்.

குடும்பத்தினர்,
8 ஆம் வட்டாரம், நயினாதீவு.

# மரண அறிவித்தல்

## நாகலிங்கம் தம்பிராசா (மன்னார் எக்ஸ்பிரஸ்)



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கண்ணன் றைஸ் மில் மற்றும் மன்னார் எக்ஸ்பிறஸ் உரிமையாளருமான நாகலிங்கம் தம்பிராசா நேற்று(08.04.2009)புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான குமாரு - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சுப்பிரமணியம்(அமரர்) மற்றும் நல்லம்மா, நாகம்மா(அமரர்), இராசையா(அமரர்),பொன்னுத்துரை, தர்மலிங்கம் (அமரர்), வைத்திலிங்கம், தியாகராசா, தங்கராசா (அமரர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் பாதுஷா (இந்தியா), பகீரதன், சிறிதரன்(அமரர்), தவேந்திரன் (அமரர்), சிவேஸ்வரன், வாசுகி (கனடா), சுகந்தி (கனடா), ஜெயந்தி(கனடா), சுதர்சன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆனந்தநடராஜா (சுவிஸ்), ஸ்ரீரஜனி, சறோஜினி,ஜெகதீஸ்வரன் (கனடா), சிவனேஸ்வரலிங்கம்(கனடா), சிவம் (கனடா), ஜெயவதனி(கனடா) ஆகியோரின்,அன்பு மாமனும் கௌசல்யா, மாயவன், தர்சன், சயந்தன், கோபிராம், கீர்த்திகன், ஜனகன், சீவகன், சிறிராம், சோபிதா, கல்ப்பனா, விஷ்ணு, லக்ஷ்மி, மீனாக்ஷி, வர்மண், அக்ஷயன், திசான், சுரம்ஜா, ஓவியா, மாதுமை ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்பு அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கே.கே.எஸ். வீதி,
இணுவில் கிழக்கு,
இணுவில்.

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி வைத்தியசாலையில் தற்காலிக விடுதி

யாழ்ப்பாணம்,ஏப்.9

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேவாலங்கா நிறுவனத்தினரால் தற்காலிக விடுதி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக இவ்வைத்தியசாலை விடுதிகளில் ஏற்பட்டுள்ள இட நெருக்கடியையடுத்து இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கு முன்னோடியாக விடுதிக்குரிய கட்டில்கள், மெத்தைகள், அலுமாரி, கதிரைகள் போன்றவை வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன. (50-207)

## புதிதாக 58 பேருக்கு மாதாந்த உதவிப்பணம்

நவாலி,ஏப்.9

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவதற்குப் புதிதாக இம்மாதம் 58 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான கொடுப்பனவும் இம்மாதத்திலிருந்து வழங்கப்படுமென்று சமூகசேவை உத்தியோகத்தர் அருந்தவராசா தெரிவித்துள்ளார்.

தங்களது பணத்தைத் தத்தமது பகுதித் தபாலகங்களில் பெற்றுக்கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (50-100)

## பிள்ளைகளைக் கண்டித்த தந்தையை நாய் கடித்தது

யாழ்ப்பாணம்,ஏப்.9

பிள்ளைகளைக் கண்டித்த தந்தையை வளர்ப்பு நாய் கடித்துக் குதறியது.

இச்சம்பவம் கடந்த 6ஆம் திகதி மீசாலையில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த ஆர்.சண்முகராசா (வயது 40) என்பவரே வளர்ப்பு நாயினால் கடியுண்டவராவார்.

கடி காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (50-207)

## பாடசாலை அபிவிருத்தி தொடர்பான கூட்டம்

அச்சுவேலி,ஏப்.9

யாழ்.ஆனைப்பந்தி மெதடிஸ் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய அதிபர் எம்.முரளிதரன் தலைமையில் நடைபெறும்.

பாடசாலையின் எதிர்கால அபிவிருத்தி தொடர்பான முக்கிய தீர்மானங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்படவிருப்பதால் பெற்றோர், நலன்விரும்பிகள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வித்தியாலய அதிபர் அறிவித்துள்ளார். (50-11)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஏப்.9

கொக்குவில் மேற்கு மணியர்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவையொட்டி இந்து இளைஞர் மன்றத்தினால் நடத்தப்பட்ட சைவசமய பரீட்சைக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் விருந்தினராகக் கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் அ.அகிலதாஸ் கலந்துகொள்வார். (50-9)

## சாவகச்சேரி கொமர்ஷல் வங்கியின் ஆண்டு விழாவும் மாணவர் கௌரவிப்பும்

யாழ்ப்பாணம்,ஏப்.9

கொமர்ஷல் வங்கியின் சாவகச்சேரி கிளையின் மூன்றாவது வருட நிறைவு விழாவும், கடந்த வருட ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் கடந்த 5ஆம் திகதி நடைபெற்றது.

வங்கி மண்டபத்தில் கிளைமுகாமையாளர் எஸ்.வி.குருபாதம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தென்மராட்சிக் கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி) வே.ஸ்ரீஸ்கந்தராசா, மீசாலை வீரசிங்கம் ம.வி. அதிபர் கு.சிவானந்தம், மட்டுவில் கமலாசனி வித்தியாலய அதிபர் செ.பேரின்பநாதன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

வங்கியில் கணக்கு வைத்துள்ள 32 மாணவர்களுக்கு சேமிப்பின் இருமடங்கு வைப்புத் தொகையும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (50-207)

## யாழ்.நகரப் பகுதி வீதிகளில் போக்குவரத்து நடைமுறை தீவிரம்

யாழ்ப்பாணம்,ஏப்.9

யாழ்.நகரில் போக்குவரத்து விதிகளைக் கடுமையாக நடைமுறைப்படுத்தும் நடவடிக்கையில் பொலிஸார் இறங்கியுள்ளனர்.

வீதியில் நடந்து செல்வது, வீதியைக் கடப்பது குறித்தும் பொலிஸார் மக்களுக்கு அறிவுரைகளை வழங்கி வருகின்றனர்.

குறிப்பாக யாழ்.ஆஸ்பத்திரி வீதியால் பயணிக்கும் மக்கள் வைத்தியசாலைக்கு அருகில் உள்ள நடைபாதையூடாகவே செல்லவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் வீதியில் வர்ணம் பூசப்பட்ட வீதிக்கடவையினூடாகவே வீதியைக் கடந்து செல்லவேண்டும் - எனவும் பொலிஸார் அறிவுறுத்தி வருகின்றனர். (50-224)

## இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையமொன்றை வடமராட்சியில் அமைக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.9

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள வடமராட்சிவாசிகளுக்கென வடமராட்சிப் பிரதேசத்திலேயே ஒரு நலன்புரி நிலையத்தை ஏற்படுத்தித் தருமாறு ஈ.பி.டி.பி.யிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பி. அமைப்பைச் சேர்ந்த பருத்தித்துறைப் பிரதேச சபையின் முன்னாள் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் தலைமையிலான ஈ.பி.டி.பி. பிரதிநிதிகள் குழு ஒன்று தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள நலன்புரி நிலையங்களுக்கு விஜயம் செய்து அங்குள்ள மக்களின் குறைகளைக் கேட்டறிந்தனர்.

நலன்புரி நிலையங்களில் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வந்தவர்களில் வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களே பெரும் எண்ணிக்கையில் தங்கியுள்ளனர்.

எனவே பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையை மையப்படுத்தி, பொருத்தமான இடம் ஒன்றில் நலன்புரி நிலையத்தை அமைத்து அங்கு தம்மைத் தங்கவைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என அக்குழுவினரிடம் மக்கள் கேட்டுக்கொண்டனர்.

இது தொடர்பாகச் சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி வடமராட்சியில் நலன்புரி நிலையம் ஒன்றை அமைக்க முயற்சிகளை எடுப்பதாகக் குழுவினர் உறுதியளித்தனர். (50-236)

## இரவுநேர ஒலிபெருக்கிப் பாவனையால் மாணவரின் கற்றல் செயற்பாடுகள் பாதிப்பு

குருநகர்,ஏப்.9

குருநகர் பகுதியில் இரவு நேரவேளைகளில் சிலர் ஒலிபெருக்கிகளைச் சத்தமாக ஒலிக்க விடுவதால் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்பட்டு வருவதாக இப்பகுதி மாணவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குருநகர் பகுதியில் வழமைபோன்று இரவுநேரங்களில் மின்தடை அமுல் செய்யப்படுவதனால் இரவு நேரங்களில் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன. மின்தடை அமுலில் இல்லாத நாள்களில் கூட குருநகரில் உள்ள சிலர் தமது வீடுகளில் வைத்துள்ள ஒலிபெருக்கிச் சாதனங்கள் மூலம் சினிமாப் பாடல்களை உச்சத்தொனியில் ஒலிக்கவிடுகிறார்கள். இதனால் சுற்றுப்புறங்களில் உள்ள மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கின்றன.

எனவே யாழ்.நகரில் வீதிப் போக்குவரத்தைச் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ள பொலிஸார் குருநகர் மாணவர்களின் கல்வியில் மிகுந்த அக்கறை கொண்டு அனுமதியின்றி ஒலிபெருக்கிக் கருவிகளைப் பயன்படுத்துவோர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என குருநகர் மாணவர்களும் பொதுமக்களும் கேட்டுள்ளனர். (50-51)

## நலன்புரி நிலையங்களில் குழாய்க்கிணறுகள் அமைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.9

தென்மராட்சிப் பகுதியில் உள்ள இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாம்களில் தங்கியிருக்கும் மக்களின் குடிதண்ணீர் தேவைக்காக அங்கு குழாய்க்கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

முகாம்களில் இருக்கும் மக்களின் தண்ணீர் பாவனைக்கென அமைக்கப்பட்ட இந்தக் குழாய்க்கிணறுகளுடன் தண்ணீர்த் தொட்டிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இதனைவிட நலன்புரி முகாம்களிலுள்ள மக்களுக்கு பவுசர் மூலம் தினமும் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது என்றார் அந்த அதிகாரி. (50-224)

## தைத்த ஆடைகளின் கண்காட்சியும் விற்பனையும்

சங்கானை,ஏப்.9

வடபிரதேச நல்லொழுக்கச் சம்மேளனம் கியூடெக் - கரித்தாஸ் அனுசரணையுடன் நடத்தும் தைத்த ஆடைகளின் கண்காட்சியும் விற்பனையும் இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் நடைபெறுகின்றது.

சம்மேளனத் தலைவர் க.புஸ்பராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வலி.மேற்குப் பிரதேச செயலர் திருமதி தே.பா... பிரதம விருந்தினராகவும் கியூடெக் - கரித்தாஸ் இயக்குநர் அருட்தந்தை கி.யோ.ஜெயகுமார் அடிகள், வலி.மேற்குப் பிரதேச சபைச் செயலாளர் சி.புத்திசிகாமணி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் பாடசாலை அதிபர் திரும. ச.யோகேஸ்வரன், கியூடெக் வாழ்வாதார திட்ட முகாமையாளர் ந.தவராஜகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வார்கள். (50-29)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஏப்.9

ஏழாலை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பங்குனித் திங்கள் திருக்குளிர்த்தி விழா எதிர்வரும் திங்கட்கிழமை மு.ப. 11 மணிக்கு அம்பாளின் விசேட பூசையுடன் ஆலய முன்றலில் இடம்பெறவுள்ளது. இந்தத் திருவிழாவில் அடியார்களுக்கு மகேஸ்வர பூசையும் இடம்பெறவுள்ளது. (201)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.9

திக்கம் மடத்துவாசல் சித்தி விநாயகர் ஆலய பஞ்சகுண்டபக்ஷ நூதனப் பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 10 மணி வரை நடைபெறவுள்ளது. (201-253)

* * *

பருத்தித்துறை மருதடி ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா கடந்த மாதம் 23 ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இறுதிநாள் திருவிழாவான பூங்காவனத் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது. (201-236)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.9

மீசாலை கிழக்கு சித்திரவேலாயுதர் ஆலயத்தில் பெரியபுராணப் படனம் நேற்று புதன்கிழமை காலை ஆரம்பமாகி 45 நாள்கள் நடைபெறவுள்ளது. (201-207)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## உரமானியத்துக்கு பதிவுசெய்யலாம்

நவாலி,ஏப்.9

ஆனைக்கோட்டை உயரப்புலம் விவசாய சம்மேளனத்தினர் விவசாயிகளுக்கு உரம் வழங்குவதற்கு உரமானியப் பதிவுகளைத் தற்போது மேற்கொண்டு வருகின்றனர்.

இதுவரை தமது பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் உடனடியாகப் பதிவுசெய்யுமாறு அதன் செயலாளர் தங்கவேலாயுதம் கேட்டுள்ளார். (50-100)



யாழ்.இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் மறைந்த எழுத்தாளர் பரராஜசிங்கத்தின் (துருவன்) ''பூ'' சிறுகதை நூல் வெளியீட்டு விழா நல்லை ஆதீன மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

நிகழ்வில் யாழ்.இலக்கிய வட்டத் தலைவர் கலாநிதி க.குணராசா, தென்னிந்தியத் திருச்சபையின் ஓய்வுபெற்ற பேராயர் கலாநிதி சு.ஜெபநேசன், பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை ஆகியோர் உரையாற்றுவதையும் -

நூலின் முதற்பிரதியைப் பேராசிரியர் இரா.சிவச்சந்திரனிடமிருந்து திருமதி பரராஜசிங்கம் பெற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுத்த ஆவிக்கு ஜெபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழி காட்டும் பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட் கொடைகளின்மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே, என் வாழ்வில் எச் சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச் சிறிய ஜெபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறு கின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாகு இருப்பினும் எக் காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேன் என உறுதிகூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்கு பெறவேண்டுகின்றோம். ஆமென்.

ஓ! பரிசுத்த ஆவியே! உமக்கு நன்றி.

அனுக்கிரகம் பெற்ற ஓர் அடியான்

## ஓராண்டு நினைவஞ்சலி



நிஜமாக 29.09.1941

நிழலாக 15.03.2008

### அமரர் ஆறுமுகம்பிள்ளை சுப்பிரமணியம்

(குகன்ஸ்ரோஸ், விநாயகர்ஸ்ரோஸ், குகன் எரிபொருள் நிலையம், மீனாட்சி அரிசி ஆலை)

துடித்தன இதயம்
உங்கள் நினைவால்
அலையாய் அடித்தது
உங்கள் நிகழ்வுகள்
வாழ்விற்கு அர்த்தம்
கொடுத்தீர்கள்
வாழவும் வழி
காட்டினீர்கள்

வாழ்ந்தும் காட்டினீர்கள்
வாழவும் வைத்தீர்கள்
நிஜமாய் மறந்த உங்கள்
நிழல், கனவாய் போன
காலங்கள், எல்லாம்
நினைவை மறந்து
உங்களுடன் வாழவைக்கின்றது
என்றும் என்றென்றும்.

144/3, பிரவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் அன்புடன்
மனைவி, மக்கள், மருமக்கள்.

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஏப்.9

இணுவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நினைவு தினமும் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு உபைநிறைவேற்று அதிபர் சிசோதிலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக கணிதப்புள்ளி விபரவியற்துறைத் தலைவர் இ.விக்னேஸ்வரன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சரோஜினி தேவி நாகராஜா கலந்து கொள்வார்.

கௌரவ விருந்தினராக மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளை முகாமையாளர் எம்.என்.இராஜதுரை கலந்த கொள்வார். மாணவர்களுக்கான பரிசுகளை திருமதி பவானி விக்னேஸ்வரன் வழங்குவார். (50-201)

## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,ஏப்.9

'சமரபாகு'' சீனா உதயகுமார் எழுதிய வெற்றியுடன், உடைந்த நினைவுகள், எனும் கவிதை நூல்களின் வெளியீட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரைநடைபெறவுள்ளது.

தி.சுபாகரன்தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக பேராசியர் எம்.நடராஜசுந்தரம் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாகவடமராட்சி உதவிக்கல்விப்பணிப்பாளர் த.தவேந்திர ராஜா, கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை அதிபர்பாவெற்றிவேல் ஆகியோர் கலந்து கொள்வர். (201)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 22 ★ 03 ★ 1930



இறப்பு 21 ★ 03 ★ 2008

### அமரர் சீனிவாசகம் கந்தசாமி

ஓர் ஆண்டு சென்றாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் ஈரவிழிகளுடன் என்றும் கலந்திருக்கும்.
அழியாத நினைவுகளுடன் உங்கள் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

வே.கிருஷ்ணவேணி(மகள்)
சிவன்கோவிலடி,
சுன்னாகம்.

மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(P/557871)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 16.08.1981

மறைவு: 09.04.2005

### அமரர் ஞானசேகரம் ஜயந்தன்

அண்ணா என்று அழைத்து
விளையாடிக் களித்தோம்
ஆண்டவனே உனை அழைத்து
தனதாக்கிக் கொண்டான்
எமக்கு உறக்கத்தில் அமைதி இல்லை
கண்ணீரை எமக்கு அளித்து
பிரிந்து சென்றாயோ!
நீ மீண்டும் வருவாயா?
ஆறுதல் அளிப்பாயா?

ஆவரங்கால் கிழக்கு,
புத்தூர்.

சகோதரிகள்: ஜயந்தினி, நிசாந்தினி.




ராஜாதி ராஜ
ராஜகம்பீர ராஜமார்த்தாண்ட
லக்கிலாண்ட் பிஸ்கட் மன்னன்
குடும்பத்துடன்
யாழ்.நகர் வாரார்! வாரார்!! வாரார்!!!

நீண்ட கால இடைவெளியின் பின் மீண்டும் யாழ்.நகரில் அழகிய வர்ணப் பைக்கட்டுக்களில் தரத்தில் அதிஉயர்ந்த, விலையில் மிகக்குறைந்த, இலங்கையில் முதல்தர பிஸ்கட்டாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தரம் கொண்ட, லக்கிலாண்ட் பிஸ்கட் தற்போது யாழ்.நகரில் நீங்கள் வாங்கிடலாம். விருந்தினர் வீட்டுக்கு வெறும் கையுடன் செல்லுவதா? விருப்பமுடன் எடுத்துச் செல்லுங்கள். விலையில் மலிந்து, தரத்தில் சிறந்து, சுவையில் சுந்தரமாய் திகழும் லக்கி லாண்ட் கிவ்ட் பிஸ்கட் வகைகள்.

லக்கிலாண்ட் உற்பத்திகளோ பல நீங்கள் அறிந்திட அவற்றிற் சில

லக்கிலாண்ட் கிப்ட் வகைகள்
லக்கிலாண்ட் லெமன் பஃவ்
லக்கிலாண்ட் லெமன் கிறீம்
லக்கிலாண்ட் போர் பொன் சொக்லட் கிறீம்
லக்கிலாண்ட் சொக்லேட் கிறீம்
லக்கிலாண்ட் பட்டர் கெரோல்
லக்கிலாண்ட் கஸ்ரட் கிறீம்
லக்கிலாண்ட் மாரி, ஜின்ஜர்
லக்கிலாண்ட் நைஸ் என்னும் பல

Manufactured By:
Luckyland
Biscuit Manufactures
Kundasale, Kandy,
Srilanka.

ஏக விநியோகஸ்தர்கள் : சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பேசி.021 222 2567

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவருடத்தில் குயில் கூவும் வேளையில் மக்கள் சுதந்திரக் காற்றை முழுமையாகச் சுவாசிக்கலாம்

## பயங்கரவாதம் பிரேதப் பெட்டிக்குள் வைத்து ஆணி அடிக்கப்படும்

கொழும்பு,ஏப்.9

பயங்கரவாதத்தை பிரேதப்பெட்டிக்குள் நீட்டி ஆணி அடிக்கும் தருணத்தில் அரசு உள்ளது என்றும் தமிழ் - சிங்கள புது வருடத்தில் குயில் கூவும் வேளையில் இந் நாட்டு மக்களால் பயங்கரவாதம் இல்லாத முழுமையான சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கமுடியும் என்றும் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நேற்றுமுன்தினம் நாடாளு மன்றத்தில் கூறினார்.

இறுதிக் கட்டத்தில் உள்ள புலிகள் பாரிய அழிவுகளை மேற்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடும் என்றும் மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும் என்றும் அவர் சொன்னார்.

அவசரக்காலச் சட்ட நீடிப்பு பிரேரணையை செவ்வாயன்று சபையில் சமர்ப்பித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

பிரதமர் மேலும் கூறியவை வருமாறு:-

பல தசாப்தகாலமாக உள்ள பயங்கரவாதப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வரும் தருணத்தில் நாம் இப்போது உள்ளோம்.

இந்தப் பயங்கரவாதத்தை சவப்பெட்டிக்குள் மூடி அதற்கு இறுதி ஆணி அடிக்கும் நிலையில் உள்ள எமக்கு அனைவரும் உதவவேண்டும்.

**முழுமையான சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கமுடியும்**

தமிழ் - சிங்கள புதுவருடத்தில் குயில் கூவும் வேளையில் எம்மால் முழுமையான சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கமுடியும்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் புலிகள் வடக்கில் பாதுகாப்பு வலயத்திற்குள் ஒழிந்துகொண்டு மக்கள் மீது தாக்குதல் நடத்துகின்றனர். சர்வதேச யுத்த விதிகளை மீறி நடக்கின்றனர். ஆனால் எமது படையினர் ஒருபோதும் அப்படிச் செயற்பட்டதில்லை.

புலிகள் விளையாட்டு வீரர்கள் மீதும் மத வழிபாட்டுத் தலங்கள் மீதும் தாக்குதல் நடத்தத் தொடங்கியுள்ளனர்.

கொலைதான் புலிகளின் தர்மம். இதை நாம் அழித்து வருகின்றோம். எமது படையினர் தற்போது புலிகளின் முக்கிய தலைவர்கள் பலரைக் கொன்றொழித்துள்ளனர். ஆனால் எந்தச் சந்தர்ப்பத்திலும் எமது படையினர் மனிதநேயத்தைக் கைவிட்டதில்லை.

**பாரிய அழிவுகளை ஏற்படுத்த முயற்சிக்கலாம்**

புலிகளின் நோக்கம் கானல்நீர் போன்றது. அது என்றும் நிறைவேறாது. அழிந்தே போகும். மக்களைக் கொலை செய்த புலிகள் அதன் பெறுபேறுகளை இப்போது அனுபவிக்கின்றனர்.

இறுதிக் கட்டத்தில் உள்ள புலிகள் நாட்டில் பாரிய அழிவுகளை ஏற்படுத்த முயலலாம். மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். இருப்பினும், புலிகளின் எந்த விதமான தாக்குதல்களையும் நாம் முறியடிப்போம்.

புலிகளின் பிரச்சாரம் மிகத் துரிதமாக முன்னேறி வருகின்றது. நாம் தமிழர்களைக் கொலை செய்கின்றோம் என்று இவர்கள் சர்வதேச மட்டத்தில் பிரசாரம் செய்கின்றனர்.

இந்தப் பிரசாரத்திற்கு சிலர் ஆதரவு வழங்குகின்றனர். இந்தப் பிரசாரத்தில் எந்த உண்மையுமில்லை. நாம் வன்னிக்கு தொடர்ந்து உணவுப் பொருள்களை அனுப்பி வருகின்றோம். ஆனால், புலிகள் அந்தப் பொருள்களை எடுத்துக்கொள்கின்றனர்.



**தமிழர்களைக் கொன்று குவிப்பது புலிகளே**

இதுதான் புலிகள் தமிழருக்குப் பெற்றுக் கொடுக்கும் விடுதலையா? தமிழர்களைக் கொன்று குவிப்பது புலிகள்தான் என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை.

இது இவ்வாறிருக்க நாம் சர்வ நாணய நிதியத்திடம் கடன்பெற முய கின்றபோது அதைத் தடுக்கும் நோ டன் சில அமைப்புகள் செயற்படுகின்ற புலி ஆதரவாளர்கள் இந்தச் சதித்திட்டத்திற்கு அனுசரணை வழங்குகின்றனர் - என்றார். (அ-சி)

# உயிரிழக்கும் படையினரின் விவரத்தை வெளியிடாமல் மறைக்கின்றது அரசு!

## ஐ.தே.கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு,ஏப்.9

வன்னியில் இடம்பெற்றுவரும் யுத்தத்தில் காணாமல் போகின்ற மற்றும் உயிரிழக்கின்ற படையினரின் விவரங்களை அவர்களின் பெற்றோர், உறவினர்களுக்கு தெரியப்படுத்தாமல் அரசு மறைக்கின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அவசரக்காலச் சட்ட நீடிப்புப் பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுக்கொண்டு வருவதையிட்டு நாம் மிக மகிழ்ச்சியடைகின்றோம். இந்த வெற்றியை நாம் மதிக்கின்றோம். இதைக் குழப்ப நாம் ஒருபோதும் முற்படமாட்டோம்.

வடக்கு-கிழக்கு மக்களின் பிரச்சினைக்கு உரிய தீர்வு முன்வைக்கப்படாவிட்டால், பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டாலும் கூட யுத்தம் முடிவுறாது. இன்னும் சில வருடங்களில் மீண்டும் யுத்தம் ஆரம்பமாகும்.

அந்தப் பகுதி மக்களின் அபிவிருத்தியில் கூடுதலாகக் கவனம் செலுத்தப்பட வேண்டும். சிவில் நிர்வாகம் உருவாக்கப்பட வேண்டும்.

இதற்கான முறையான திட்டம் ஒன்றை வகுக்காவிட்டால், நாம் இராணுவ வெற்றியை இழந்துவிடுவோம். மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுவதை தடுக்கமுடியாமல் போய்விடும்.

தற்போது யுத்தக் களத்தில் மரணிக்கும் மற்றும் காணாமல் போகும் படையினரின் விவரங்களை அவர்களின் பெற்றோருக்குத் தெரிவிக்காமலே அரசு மறைத்து வருகின்றது.

அரசு இவ்வாறான செயற்பாடுகளை உடன் நிறுத்தவேண்டும். மரணிக்கும் மற்றும் காணாமற்போகும் படையினர் விவரங்களை பெற்றோருக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

இதேவேளை படையினரின் பெற்றோர்கள், மனைவிமார், பிள்ளைகள் போன்றோர்களின் நலன்கள்மீது அரசு கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

தற்போது தேர்தல் வன்முறைகள் அதிகரித்துள்ளன. ஜே.வி.பியின் உறுப்பினர் ஒருவர் கம்பஹாவில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். இது தொடர்பாக அரசு விசாரணை நடத்த வேண்டும்.

எமது கட்சி அலுவலகங்கள் பல தாக்கப்பட்டுள்ளன. எமது ஆதரவாளர்கள் மற்றும் வேட்பாளர்கள் ஆகியோர் மிரட்டப்படுகின்றனர் - என்றார். (சி)

# பாதுகாப்பு வலயத்தில் ஷெல் தாக்குதல்கள்

## வரதராஜா தெரிவிப்பு; அரச தரப்பு மறுப்பு

கொழும்பு,ஏப்.9

வடக்கில் பாதுகாப்பு வலயமாக அரசு அறிவித்துள்ள பகுதியில் இப்போதும் ஷெல் தாக்குதல்கள் தொடர்கின்றன - என்று முல்லைத்தீவு மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் வரதராஜா பி.பி.ஸிக்குத் தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில் -

இராணுவம் இருக்கும் திசையிலிருந்தே இந்த ஷெல்கள் வந்து விழுகின்றன. கடந்த இருபத்து நான்கு மணி நேரங்களில் மட்டும் கொல்லப்பட்ட பொதுமக்களின் சடலங்கள் ஒன்பதும் காயமடைந்தவர்கள் 65 பேரும் புதுமாத்தளனில் உள்ள தற்காலிக மருத்துவமனைக்கு கொண்டுவரப் பட்டுள்ளன - என்றார்.

ஆனால் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் இலங்கைப் படையினர் தாக்குதல் நடத்துகின்றனர் எனக் கூறப்படுவதை இலங்கை வெளியுறவு அமைச்சர் ரோஹித பொகொல்லாகம மறுத்துள்ளார்.

தமிழ்ச் சமூகத்தினரின் மனங்களை வெல்வதே தமது குறிக்கோள் என்றும் அந்த நோக்கத்துடனேயே தாங்கள் செயற்பட்டு வருவதாகவும் பி.பி.ஸிக்கு வழங்கிய செவ்வியில் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (சி)

# சரியான ஆவணங்களைச் சமர்ப்பிக்காதோர் வடக்கிலிருந்து தெற்கு செல்ல பயணத்தடை

கொழும்பு,ஏப்.9

வடக்கிலிருந்து தென்பகுதிக்குச் செல்பவர்கள் குறிப்பாகத் தமது பிரயாணத்திற்கான நோக்கத்தை சரியான ஆவணங்கள் மூலம் தெளிவுபடுத்த முடியாத எவரும், மதவாச்சி சோதனைச்சாவடி ஊடாகப் பிரயாணம் செய்ய முடியாதிருக்கிறது என முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

மரண வீடுகளுக்குச் செல்பவர்கள், திருமண வைபவங்களுக்குச் செல்பவர்கள் அவற்றுக்குரிய தந்தி மூலமான அறிவித்தல் மற்றும் திருமண அழைப்பிதழ்கள் போன்றவற்றைக் காண்பித்தாலும்கூட அவற்றை மதவாச்சி சோதனைச்சாவடியில் கடமையில் உள்ள பொலிஸார் ஏற்றுக் கொள்வதில்லை என்று பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான தேவைகளுக்காகப் பயணிப்பவர்கள் பல தடவைகள் மதவாச்சி வரை சென்று திருப்பி அனுப்பிவைக்கப்படுகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

வெளிநாடுகளுக்குச் செல்பவர்கள், உரிய கடவுச்சீட்டுடன் விமானப் பயணத்திற்கான அனுமதிச்சீட்டு இருந்தால் மட்டுமே மதவாச்சியைக் கடந்து செல்ல அனுமதிக்கப்படுகின்றனர் எனக் கூறப்படுகின்றது.

திருமணமாகிய பின்னர், வெளிநாட்டில் உள்ள தமது கணவருடன் இணைந்து கொள்வதற்காக விஸா பெறச் செல்லும் இளம் குடும்பப் பெண்களும் பிரயாணத்தைத் தொடர முடியாமல் திருப்பி அனுப்பி வைக்கப்படுகின்றனர். பல தடவைகள் முயற்சிகள் மேற்கொண்டும் பலன் கிடைப்பதில்லை எனச் சிலர் தெரிவிக்கின்றனர்.

நோயாளர்களில் உடல் நலம் பாதிக்கப்பட்டிருப்பது தோற்றத்தில் தெரியாதவர்கள் என்னதான் ஆவணங்களை வைத்திருந்தாலும், அவர்களையும் சோதனைச் சாவடி பொலிஸார் மதவாச்சியைக் கடந்து தென்பகுதிக்குச் செல்ல அனுமதிப்பதில்லை எனப் பலரும் கவலை தெரிவிக்கின்றனர்.

இதற்கிடையில், முக்கிய திணைக்களத் தலைவர்களாகப் பணியாற்றும் அதிகாரிகளும் தமது வாகனத்தில் மதவாச்சி சோதனைச்சாவடி ஊடாக முன்னர் பிரயாணம் மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். இந்த அனுமதியும் தற்போது மறுக்கப்படுகிறது என அதிகாரிகள் பலரும் தமது உயரதிகாரிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் முறையிட்டுள்ளனர்.

தமிழ் பேசும் மக்கள் மாத்திரமே இத்தகைய கெடுபிடிகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர் எனவும், வவுனியா மன்னார் மாவட்டங்களில் நிரந்தரமாக வாழ்ந்து வருபவர்களுக்கும் கூட இவ்வாறாக பிரயாண அனுமதி மறுக்கப்படுவது ஏன் எனப் பலரும் வினா எழுப்புகிறார்கள். (சி)

# ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை; மேலும் சில பாடசாலைகளின் முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.9

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. (சாதாரண) தரப் பரீட்சை முடிவுகளை மேலும் சில பாடசாலை அதிபர்கள் 'உதயனுக்கு' அனுப்பிவைத்துள்ளனர். அந்த முடிவுகள் வருமாறு:

**வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை**

*ஆங்கில மொழி மூலம்* - லக்சனா கமலநாதன் - 9ஏ, சோபினி நித்தியானந்தன் - 9ஏ, யோகினி சிவஞானசெல்வம் - 9ஏ, திவ்யா மகேந்திரராஜா - 8ஏபி, கஸ்தூரி சிவகுமார் - 8ஏபி, லக்சனா தங்கராசா - 7ஏ2பி, கௌதமி கங்காதரன் - 6ஏபி2சி, வினோதா பரமானந்தம் - 5ஏ4சி.

*தமிழ்மொழி மூலம்* - சாருண்யா செல்வராஜா - 9ஏ, மைதிலி தங்கராசா - 9ஏ, ஞானகீதா வின்சன் கோமகள் - 7ஏபிஎஸ், தனலட்சுமி ஜெயபாலன் - 6ஏ2பிசி, கவிஞ்ஜா விமலநாதன் - 6ஏ2பிஎஸ், மயூரி நாகதேவன் - 5ஏ4பி, கீர்த்தனா மணிவண்ணன் - 5ஏ3பிசி, சஜீவனா சிவச்செல்வம் - 5ஏ3பிஎஸ், சுவர்ணா தர்மலிங்கம் - 5ஏ3பிசி, ரூபினி நவரட்ணராஜா- 5ஏ2பி2சி, நிசானி இராஜலிங்கம் - 5ஏ2பி2சி, க.நிவேதா - 5ஏ2பி2சி, யோதினி செல்வானந்தம் - 5ஏ2பி2சி, குயிலி சூரியகுமார் - 5ஏ2பி2சி, அகல்யா ஈஸ்வரன் - 5ஏ2பி2எஸ், தர்சிகா பத்மநாதன் - 5ஏபி2சி, துர்க்கா சிவபாலு - 5ஏபி2சி.

**சண்டிலிப்பாய் இந்து**

தங்கவேலு கடோற்கஜன் - 7ஏபிசி, சண்முகலிங்கம் லக்சனா - 7ஏபிஎஸ், ரவிச்சந்திரன் ரஜீதா - 6ஏ2பிஎஸ், நடராஜக் குருக்கள் கீர்த்திகா சுதன் - 6ஏபிசிஎஸ், கந்தசாமி கோபிந்தன் - 4ஏ4பிஎஸ், நவரத்தினராசா துஷாந்தி - 4ஏ4பிஎஸ், நித்தியானந்தம் தர்சினி - 4ஏ3பிசி, யோகேந்திரம் குயின்சி - 4ஏ3பிசிஎஸ், கனகலிங்கராசா சோபிகா - 4ஏ2பி2சி, தேவதாசன் சுதர்சினி - 4ஏ2பி2சிஎஸ், சங்கர் குணாளன் - 4ஏபி2சிஎஸ், நற்கு[illegible] - 4ஏ2பிசி, குமாரகுலசிங்க[illegible] - 3ஏபி, நடராஜா அகல்யா - 3ஏ4பிசிஎஸ், நவரட்ணம் திலக்சன் - 3ஏ2பி3சி, சந்திரகுமார் சாருஜன் - 3ஏபிசி2எஸ், சற்குணம் மயூரி - 3ஏ3சிஎஸ்.

**மாதகல் சென்.யோசப் மகாவித்தியாலயம்**

வே.சிறீதேவி - 9ஏ, தி.பகீகரன் - 6ஏபிசிஎஸ், வி.திருமாலவன் - 5ஏ3பிஎஸ், தி.குகப்பிரியா - 4ஏ3பிசிஎஸ், து.திருக்குமரன் - 3ஏ2பி2சிஎஸ், த.மயூரன் 2ஏ3பி3சிஎஸ், இ.கிரிசா - 2ஏபி3சி2எஸ், வ.லிக்சனா - 2ஏபி2சி3எஸ், வி.வேணுதா - 2ஏ3பி2சிஎஸ்.

**இணுவில் இந்துக் கல்லூரி**

ம.தக்சாயினி - 6ஏ2பிசி, ச.நரேந்திரா- 6ஏபிசிஎஸ், ச.லபிதா - 5ஏபி2சிஎஸ், கு.கஜனி - 3ஏ4சி2எஸ், வி.சுகன்யா - 3ஏசி5எஸ், இ.பத்மினி - 3ஏ4சிஎஸ்.

**பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி**

ஜானுஜா திருநாவுக்கரசு - 9ஏ, ஜனிதா கணேசலிங்கம் - 8ஏபி, சரணியா செல்வரட்ணம் - 6ஏ2பிசி, கார்த்தியாயினி செல்வரட்ணம் - 4ஏபி2சி2எஸ், அமிரா தவம் - 3ஏ3பிசி2எஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## தரம் - 05 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான

# தயார்படுத்தல் பரீட்சைத் தொடர் - 2009

**வினாத்தாள் - I** நேரம்: 45 நிமிடங்கள்

* முதலாம், இரண்டாம் வினாக்களில் தரப்பட்டுள்ள நான்கு உருக்களில் வேறுபட்ட உருவின்கீழ்க் கோடிடுக.

01. 1) 2) 3) 4)



02. 1) 2) 3) 4)




* 3ஆம், 4ஆம் வினாக்களில் உள்ள கருத்துக்கள் உணர்த்தும் பழமொழிகளைத் தெரிவு செய்க.


03. எல்லை மீறினால் எதுவும் தீமை தரும்.
1) அவசரம் அல்லல் தரும். 2) அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.
3) ஆற்றிலே போட்டாலும் அளந்துபோடு. 4) பேராசை பெருநட்டம்.

04. ஒற்றுமையாக இருந்தால் பிரிவுகள் ஏற்படாது.
1) அடம்பன்கொடியும் திரண்டால் மிடுக்கு. 2) உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
3) மனமுண்டானால் இடமுண்டு. 4) இரக்கப்போனாலும் சிறக்கப்போ.

05. இவ் உருவில் உள்ள ஆகக்கூடிய முக்கோணிகள் எத்தனை?
1) 12 2) 15
3) 08 4) 10



06. பின்வரும் உருக்களில் அடுத்துவரும் உருவைத் தெரிவுசெய்க?




1) 2) 3) 4)

07. பின்வரும் உருக்களில் அடுத்துவரும் உருவைத் தெரிவுசெய்க?



1) 2) 3) 4)

08. இச் சதுரத்தின் பரப்பளவு $36cm^2$ எனின், சுற்றளவு யாது?
1) 9cm 2) 6cm
3) 24cm 4) 12cm




* 9ஆம், 10ஆம் வினாக்களுக்குப் பின்வரும் குறியீட்டுச் செய்கையை அவதானித்து விடை தருக.

| 9 A 3 = 3 B 6 |

09. A என்னும் எழுத்திற்குப் பொருத்தமான குறியீடு யாது?
1) கழித்தல். 2) பெருக்கல். 3) கூட்டல். 4) வகுத்தல்.

10. 4 A 2 B 4 என்னும் செய்கையின் பெறுமதி யாது?
1) 6 2) 4 3) 8 4) 10


* 11ஆம், 12ஆம் வினாக்களுக்கு பின்வரும் தரவுகளை அடிப்படையாகக்கொண்டு விடை தருக.

1 மாம்பழம், 2 தோடம்பழம் } 80.00
3 மாம்பழம், 2 தோடம்பழம் } 140.00

11. 4 மாம்பழங்களினதும், 4 தோடம்பழங்களினதும் மொத்த விலை யாது?
1) 200 2) 220 3) 160 4) 240


12. ஒரு மாம்பழத்தினதும், ஒரு தோடம்பழத்தினதும் மொத்த விலை யாது?
1) 30 2) 50 3) 55 4) 60

13. உருவில் லட்டு, உணவு, சிற்றுண்டி என்பவற்றுக்கிடையிலான தொடர்பைக் காட்டும் சரியான ஒழுங்கு யாது?
1) A - உணவு, B - சிற்றுண்டி, C - லட்டு.
2) A - லட்டு, B - உணவு, C - சிற்றுண்டி.
3) A - லட்டு, B - சிற்றுண்டி, C - உணவு.
4) A - சிற்றுண்டி, B - லட்டு, C - உணவு.





* 14ஆம், 15ஆம் வினாக்களில் X என்னும் இடத்தில் வரவேண்டிய பெறுமானத்தைத் தெரிவுசெய்க.

14.




1) 33 2) 23 3) 28 4) 35


15.




1) 25 2) 30 3) 35 4) 40

பின்வரும் உருக்களில் அடுத்துவரும் உருவைத் தெரிவுசெய்க?

16.




(1) (2) (3) (4)

17. நேற்று புதன்கிழமை எனின், நாளை மறுதினத்திற்கு அடுத்தநாள் என்ன கிழமை?
1) ஞாயிறு. 2) சனி. 3) வெள்ளி. 4) திங்கள்.

* 18ஆம், 19ஆம் வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் தரவுகளைப் பயன் படுத்துக.

கபிலனை விட கஜன் உயரம் குறைந்தவன், ரமணன் கபிலனை விட உயரம் கூடியவன், நிசார் கபிலனை விட உயரம் குறைந்தவன், ஆனால் கஜனை விட உயரம் கூடியவன்.


18. நால்வருள்ளும் உயரம் கூடியவர் யார்?
1) கபிலன். 2) கஜன். 3) ரமணன். 4) நிசார்.

19. நால்வரையும் உயர அடிப்படையில் ஏறுவரிசைப்படுத்தினால் மூன்றாவதாக இருப்பவர் யார்?
1) கஜன். 2) நிசார். 3) ரமணன். 4) கபிலன்.

20. பகல் - வெளிச்சம் எனின், இரவு - ..........................................
1) சந்திரன். 2) நட்சத்திரம். 3) தூக்கம். 4) இருள்.

21. வானம் - ஆகாயம் எனின், காடு - ..........................................
1) நாடு. 2) வனம். 3) மிருகம். 4) மரம்.

* 22ஆம், 23ஆம் வினாக்களுக்குப் பின்வரும் கோட்டு வரைபைப் பயன்படுத்துக.





22. காயத்திரிக்கு D என்ன உறவுமுறை?
1) அண்ணன். 2) அப்பா. 3) பாட்டன். 4) மாமா.

23. S இன் தாயாக இருக்கக்கூடியவர் யார்?
1) காயத்திரி. 2) சாரதா. 3) K 4) பாமா.

24. கபிலனின் வயது 9 ஆகும். தந்தையின் வயது கபிலனின் வயதின் 4 மடங்காகும். தந்தையினதும், தங்கையினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 42 ஆகும். எனின், தங்கையின் வயது யாது?
1) 4 2) 6 3) 8 4) 5

25.





ஒருவர் A யிலிருந்து புறப்பட்டு B ஐ அடையும்வரை எத்தனை முறை வலதுபக்கம் திரும்பியுள்ளார்?
1) 3 2) 4
3) 5 4) 6

26. பின்வருவனவற்றுள் நான்கு தீக்குச்சிகளை வைத்து உரோமன் எண்ணாக்கக்கூடிய எண் யாது?
1) 4 2) 6 3) 7 4) 8

27. தரப்பட்டுள்ள சதுரவடிவக் காணியைச்சுற்றி 2 தடவை ஒருவர் நடந்தார். எனின், எத்தனை மீற்றர் நடந்திருப்பார்?
1) 200m 2) 300m 3) 400m 4) 600m





28. B போத்தலை நிரப்ப A போத்தலால் எத்தனை தடவை நீர் ஊற்றவேண்டும்?
1) 2 2) 4
3) 6 4) 8





29. பின்வருவனவற்றுள் கடலில் எப்போதும் காணக்கூடியது எது?
1) அலை. 2) மீன். 3) நீர். 4) கப்பல்.

30. பின்வருவனவற்றுள் எதன் பரப்பளவு ஒரு சதுர எண்ணைத் தரும்?




31. A,B ஆகிய இரு தராசுகளிலும் உள்ள பொருட்கள் சமனாவதற்கு A தராசில் இருந்து B தராசிற்கு இடவேண்டிய நிறை யாது?
1) 1kg 2) 500g
3) 250g 4) 1kg 500g





**அன்பு மாணவர்களே!**

இப்பகுதியில் வெளியாகியுள்ள வினாத்தாள் - 1 இற்கான விடைக்குறிப்புகளுடன், வினாத்தாள் - 11 எதிர்வரும் வியாழக்கிழமை பிரசுரமாகும். இப்பகுதியில் தொடர்சியாக வெளிவரும் வினாத்தாள்களை நேரங்கணித்துப் பயிற்சிசெய்து இவ் வருடம் நடைபெறவுள்ள அரச பரீட்சைக்கு இன்றே தயாராகுங்கள். உங்கள் விடைகளை ஆசிரியரின் விடைகளுடன் ஒப்பிட்டுப்பார்க்க மறவாதீர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. இதில் குறிப்பிட்ட நேரத்துக்கு வழமையாக வேலைக்குச் செல்லும் சங்கர், ஒருநாள் 15 நிமிடங்கள் பிந்திச்சென்றான். எனின், அவன் சென்ற நேரம் யாது?





1) 7.00 2) 7.20
3) 7.30 4) 7.45

33. நிசாந் ஒருநாளைக்கு இரண்டுமுறை பல் துலக்குவான். எனின், அவன் மாசி 5ஆம் திகதி யிலிருந்து 10ஆம் திகதி வரை எத்தனைமுறை பல் துலக்கியிருப்பான்?
1) 5 2) 6 3) 10 4) 12


* 34ஆம், 35ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருக்களின் இடைவெளிகளில் வரவேண்டிய மிகப்பொருத்தமான உருவைத் தெரிவுசெய்க.

34.




(1) (2) (3) (4)

35.




(1) (2) (3) (4)

36. இவ்வுருவில் உள்ள செங்கற்களின் எண்ணிக்கை எத்தனை?
1) 38
2) 30
3) 40
4) 56



* 37ஆம், 38ஆம் வினாக்களுக்குப் பின்வரும் உருவை அவதானிக்குக.




37. A யிலிருந்து C யினூடாக D ஐ அடைவதற்கு எடுக்கும் தூரம் யாது?
1) 75m 2) 30m 3) 80m 4) 70m

38. ஒருவர் A யிலிருந்து புறப்பட்டு சகல ஆங்கில எழுத்துக்களினூடாகவும் பயணித்துத் திரும்பவும் அதே இடத்தை அடைவதற்கு எடுக்கும் தூரம் யாது?
1) 155m 2) 165m 3) 80m 4) 170m

**ஆக்கம்:- ஆசிரியர் எஸ்.தீபன்**
**பூந்தோட்டம் மகாவித்தியாலயம்,**
**வவுனியா.**

* 39ஆம், 40ஆம் வினாக்களுக்கு பின்வரும் பாடலைக்கொண்டு விடை எழுதுக.

வரம்புயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயர குடி உயரும்
குடி உயர கோல் உயரும்
கோல் உயர கோன் உயர்வான்.

39. இப்பாடலில் 'குடி' எனக் குறிப்பிடப்படுவது,
1) குடித்தல். 2) மக்கள். 3) நீர். 4) நெற்கதிர்.

40. இப்பாடலில் 'கோன்' எனக் குறிப்பிடப்படுவது,
1) விவசாயி. 2) மக்கள். 3) தொழிலாளி. 4) மன்னன்.

இவ்வினாத்தாளின் விடைக்குறிப்புக்களும் பகுதி 11 உம் அடுத்தவாரம் வெளிவரும்......

## தயார்படுத்தல் பரீட்சை -09, பகுதி-11 இன் விடைக்குறிப்புகள்

01 - நாளாந்தம், 02 - தொடர்பு சாதனங்கள், 03 - தீது/பிழை, 04 - குற்றப் பரிகாரம், 05 - சேய்மை, 06 - எடுத்தல், 07 - அவமதிப்பு, 08 - அநீதி, 09 - (வீதிக்கடவை, வீதிச் சமிக்ஞை, வாகனங்கள்), 10 - பொறுப்பான அதிகாரிகள், 11 - (மெல்ல மெல்ல, அக்கம்பக்கம்), 12 - (சாரதிகள், பாதசாரிகள்), 13 - (மேல் + கொண்டு), 14 - (தவறு + இழைப்பவர்), 15 - 187, 16 - ரசிக்கா, 17 - 228m, 18 - 225m, 19 - அம்மைதானத்தின் 1/4 பகுதி, 20 - ஒரு வாரமும் 5 நாட்களும் 12 மணித்தியாலங்களும், 21 - வியாழன், 22 - வெள்ளி, 23 - (1. செவ்வாய், 2. சனி), 24 - 535, 25 - 90, 26 - 230, 27 - 3, 28 - 5, 29 - 1, 30 - 2, 31 - 4, 32 - பாடசாலை, 33 - மேற்கு, 34 - தென்கிழக்கு, 35 - சந்தை, 36 - தபாலகம், 37 - 12, 38 - 8, 39 - 6, 40 - 625cm$^2$, 41 - 2kg 550g, 42 - 47 வரை பொருத்தமான கருத்துள்ள வாக்கியங்கள்.

**எதிர்வரும் வியாழக்கிழமை வவுனியா மாவட்ட பிரபல ஆசிரியர் திரு.எஸ்.தீபன் தொகுத்துவழங்கும் வினாத்தாள்-11 வெளிவரும் என்பதை மாணவர்களுக்கு கல்விச்சுடர் அறியத்தருகின்றது.**

**கல்விச்சுடர் தொடர்பான**
விமர்சனங்களுக்கும் கருத்துக்களுக்கும் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்க.
021-2229944 / 071-6850005 / 071-4273035.



தாவளை-இயற்றாலை மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தைப்பூச விழா அண்மையில் கொடிகாமம் துர்க்கா முன்பள்ளி மண்டபத்தில் நடைபெற்றது.
நிகழ்வில் வீட்டுத் தோட்டப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதலிடத்தையும், மாகாண மட்டத்தில் இரண்டாமிடத்தையும்பெற்ற திருமதி ர.சுதர்சினிக்கு சாவகச்சேரி விவசாய போதனாசிரியர் சு.விஜயகுமார் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (50-207)





மயிலிட்டி றோ.க.த பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.
நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பாடசாலையின் ஓய்வுபெற்ற ஆசிரியர் திருமதி கௌரி மனோகரி கணேசலிங்கம் உரையாற்றுவதை முதல் படத்திலும் மாணவர்களின் உடற்பயிற்சி நிகழ்வினை இரண்டாவது படத்திலும் காணலாம்.




உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் அனுசரணையுடன் பசுப்பால் வழங்கப்பட்டு வரு கிறது. ஆரம்ப வைபவத்தில் அதிபர் திருமதி ரஞ்சிதம் குட்டித்தம்பி மாணவர்களுக்குப் பசுப் பால் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்:கண்ணன்)



தமிழ்த்தினப் போட்டியில் கடந்த ஆண்டு பிரிவு I இல் இலக்கிய ஆய்வுத்திறன் போட்டியில் தேசிய ரீதியில் முதலாம் இடத்தைப்பெற்ற கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மாணவிகளான ஜெ.அர்ச்சனா, பு.ஜீவனா, க.பியந்தினி, சி.சஜிதா, ந.துவாரகா ஆகியோருக்குக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தபோது எடுக்கப்பட்ட படம்.
நிகழ்வில் பழைய மாணவர் சங்கத்தின் பிரதித் தலைவர் நடேசு பாஸ்கரன் பரிசில் வழங் கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (படம்:சுந்தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



## அமரர்
# பஞ்சாட்சரம் கிருபாகரன்

(உரிமையாளர் - சாரங்கன் நகைமாடம்)

தோற்றம்: 11.01.1970 மறைவு: 13.04.2006

**திதி: 09.04.2009 - பூரணை**

ஆண்டு மூன்று ஆனதுவோ!
கிருபா உமைப் பிரிந்து வாடுகின்றோம் நாமே
எமைவிட்டு எங்கேதான் ஓடிச் சென்றீரோ?
பொல்லாத காலன் உமைக் கொண்டு சென்றானோ?
உம் பிரிவால் வாடிடும் எம் குரல்தான் கேட்கலையா?
இறைவனடி சேர்ந்திடவே உறுதிமொழி கொண்டீரோ?

உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
பெருங்குளம் பிள்ளையாரை வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பெருங்குளம் பிள்ளையார் கோயிலடி,
கல்வயல், சாவகச்சேரி. (சி/557945)

அன்னாரின் பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## திருமதி அன்னம்மா தியாகராஜா

(இளைப்பாறிய ஆசிரியை, யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி)

**மண்ணில் : 13.11.1931** (திதி: 09.04.2009 - பூரணை) **விண்ணில் : 21.03.2008**



**ஆற்றொணாப் பிரிவில்....**
சுடர்விட்ட குல விளக்கு அணைந்து ஓராண்டு ஆனதோ?
ஆசிரியர்க்கு எடுத்துக்காட்டாய் அன்னைக்கு இலக்கணமாய்
பெண்மையின் பூரணியாய் பெற்றோர்க்கு நன் மகளாய்
கணவனுக்கு வாசுகியாய் அயலவருக்கு ஊன்று கோலாய்
இல்லார்க்கு வள்ளலாய் எல்லோருக்கும் இனியவராய்
மாணவர்க்கு ஏணியாய் மனையியலில் வல்லவியாய்
அன்னத்தின் பெயர் பூண்ட அன்னம்மா அன்பவரே
அணைந்து மறைந்தோடி ஆண்டொன்று சென்றதுவோ?
நோயென்னும் அரக்கன் அன்பு உடலில் குடிகொண்டு
உடற்கோலம் இழந்து கண்டவர் ஏங்கிட
ஆண்டவனும் விளையாட இவர் உடல் கிடைத்ததுவோ?
ஈரேழு ஆண்டாய் வலுவிழந்து மனையிடத்தே
ஓயாது மருந்துடன் தன் துன்பம் தான் மறந்து
இறுதி மூச்சுவரை தன் கொடியின் நினைவுடனே
எமைவிட்டு எம்விளக்கு சொல்லாமல் மறைந்ததோ
ஆண்டென்ன யுகமொன்று ஆனாலும்
அன்பின் திருவுருவும் அருங்குணமும்
அழியாத ஓவியமாய் நிலைபெறும் எம்மனதில்
நம் ஜீவன் உள்ளவரை துதிப்போம் போற்றுவோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

நின் ஆத்மசாந்திக்காய் அங்கலாயும்...
அன்புக் கணவர்: வை.தியாகராஜா (ஆசிரியர்),
சத்தியபாமா ஸ்ரீகரன் குடும்பம், சிவானந்தராசா குடும்பம்,
பாஸ்கரராஜா குடும்பம், சிவசோதிராஜா குடும்பம்,
சிவனேசராஜா குடும்பம், ரவீந்திரராஜா குடும்பம்.
பேரப்பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள்.

புத்தூர் மேற்கு, புத்தூர். (84158)

கணவர் - வை.தியாகராஜா
(ஓய்வுபெற்ற ஆசிரியர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசந்த எழுச்சிப் பேரவையின் உதைபந்தாட்டம்; இறுதியாட்டத்தில் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த யங் கென்றீசியன்- ஞானமுருகன் அணிகள் மோதும்

யாழ்ப்பாணம், ஏப்.9

யாழ்.மக்கள் வசந்த எழுச்சிப் பேரவையினால் யாழ்.மாவட்டத்திலுள்ள உதைபந்தாட்ட லீக்குகளின் அணிகளுக்கிடையே நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் விளையாடுவதற்கு வலிகாமம் லீக்கைச் சேர்ந்த இரு அணிகள் தெரிவாகியுள்ளன.

இளவாலை யங்கென்றீசியன் விளையாட்டுக் கழகம், ஏழாலை ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் ஆகியவையே இறுதியாட்டத்தில் விளையாடுவதற்குத் தகுதி பெற்றுள்ளன.

நீண்ட காலத்தின் பின் பிரபலமான இரு அணிகள் மோதும் இறுதியாட்டமாக இது அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற அரையிறுதிப் போட்டிகளைத் தொடர்ந்து இவ்விரு அணிகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அரையிறுதி ஆட்டம் ஒன்றில் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த இளவாலை யங்கென்றீசியன் விளையாட்டுக் கழகமும் யாழ்.லீக்கைச் சேர்ந்த யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அணியும் மோதிக்கொண்டன. இதில் யங் கென்றீசியன் விளையாட்டுக் கழகம் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தெரிவானது.

யங்கென்றீசியன் அணி சார்பில் ஞானரூபன் இரண்டு கோல்களையும், லோறன்ஸ் றஜீவ் ஒரு கோலையும் போட்டனர்.

மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த ஏழாலை ஞானமுருகன் விளையாட்டுக் கழகமும் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கைச் சேர்ந்த அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

ஆட்ட முடிவில் ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் 4:0 என்ற கோல் கணக்கில் வென்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. ஞானமுருகன் சார்பில் தசரதன் இரண்டு கோல்களையும் தீபன், சுதன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் போட்டனர்.

இறுதியாட்டத்தில் இளவாலை யங் கொன்றீசியனும், ஏழாலை ஞானமுருகனும் மோதவுள்ளன. (50-86)

# கே.சி.சி.சி.வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று ஆரம்பம்

வலி.வடக்கு, ஏப்.9

கே.சி.சி.சி.வெற்றிக் கிண்ணத்துக்காக கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் மாவட்ட மட்டத்தில் கழகங்களுக்கு இடையே நடத்தும் 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இம்முறை 16 கழகங்கள் கலந்து கொள்கின்றன.

போட்டியின் ஆரம்ப நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை கொக்குவில் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

[illegible] முறையில் நடத்தப்படும் இப்போட்டியில் கழகங்கள் நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

'ஏ' பிரிவில் யாழ்ப்பாணம் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகம், வடமராட்சி உடுப்பிட்டி ஈகிள் விளையாட்டுக் கழகம், தெல்லிப்பழை கிறாஸ் கொப்பேர்ஸ் விளையாட்டுக் கழகம், மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழகம் ஆகியன இடம்பெற்றுள்ளன.

'பி' பிரிவில் கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக் கழகம், யாழ்ப்பாணம் ரி.சி.சி.விளையாட்டுக் கழகம், யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் .கழகம், வலிகாமம் யங் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் ஆகியன இடம்பெற்றுள்ளன.

'சி' பிரிவில் யாழ்ப்பாணம் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகம், அரியாலை ஸ்ரான்லி விளையாட்டுக் கழகம், வண்ணார்பண்ணை காமாட்சி விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாணம் நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழகம் ஆகியன உள்ளன.

'டி' பிரிவில் யாழ்ப்பாணம் சென்ரல் விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம், தெல்லிப்பழை விளையாட்டுக் கழகம், யாழ்ப்பாணம் பல்கலைக் கழக விளையாட்டுக் கழகம் ஆகியன இடம் பெற்றுள்ளன.

இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வடமராட்சி உடுப்பிட்டி ஈகிள் விளையாட்டுக் கழகம் மோதும்.

பிற்பகல் 1 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் எதிர்த்து வலிகாமம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் மோதும். (50-86)

# சென்.அன்ரனிஸ் மாணவர் சாதனை

யாழ்ப்பாணம், ஏப்.9

ஊர்காவற்றுறை கோட்ட மட்ட மெய்வன்மைப் போட்டிகளில் புனித அந்தோனியார் கல்லூரி மாணவர்கள் 5பேர் மூன்று விளையாட்டுக்களில் முதலிடங்களைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

சாதனை படைத்த மாணவர்களின் விவரம் வருமாறு:-

**15 வயதுப்பிரிவு - ஆண்**

அ.அலெக்ஸ் (நீளம் பாய்தல், 100 மீற்றர் ஓட்டம், 200 மீற்றர் ஓட்டம்).

**17 வயதுப்பிரிவு - ஆண்**

ப.சிவதீபன் (நீளம் பாய்தல், உயரம் பாய்தல், தத்தி மிதித்துப் பாய்தல்).

**19 வயதுப்பிரிவு - ஆண்**

டொமின்கோ (நீளம் பாய்தல், தத்தி மிதித்துப் பாய்தல், உயரம் பாய்தல்).

**21வயதுப்பிரிவு - ஆண்**

மு.ஆல்தோ (100 மீற்றர் ஓட்டம், 200 மீற்றர் ஓட்டம், 400 மீற்றர் ஓட்டம்), மா. தினேஸ் (800 மீற்றர் ஓட்டம், 1500 மீற்றர் ஓட்டம், 5000 மீற்றர் ஓட்டம்).

இந்தக் கல்லூரி கோட்ட மட்டத்தில் அதிக புள்ளிகளைப் பெற்று முதலாம் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (50-325)

# வேலணைப் பிரதேச செயலகம் வெற்றி

வேலணைப் பிரதேச செயலக ஊழியர் அணிக்கும், தீவக வலயக் கல்வி அலுவலக ஊழியர் அணிக்கும் இடையே நடைபெற்ற 10 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட சிநேகபூர்வமான மென்பந்து துடுப்பாட்டத்தில் வேலணைப் பிரதேச செயலக அணி 50 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இவ்வாறான போட்டிகள் அலுவலக ஊழியரிடையே சிநேகபூர்வ மனப்பாங்கை வளர்க்க உதவும் எனத் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி.இராதகிருஸ்ணன் தெரிவித்தார். (50-206)

# தெல்லிப்பழைப் பிரதேசக் கரப்பந்[illegible]டம்; ஐக்கியத்தை வீழ்த்தியது பன்னாலை கணேசன்

வலி.வடக்கு, ஏப்.9

தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் பன்னாலை கணேசன் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் பன்னாலை கணேசன் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முதல் இரண்டு சுற்றுக்களிலும் கடுமையான போட்டி நிலவியது. இரு அணிகளும் தலா ஒவ்வொரு சுற்றுக்களிலும் வெற்றிபெற்றன.

முதல் சுற்றில் 24 புள்ளிகள் வரை மாறி மாறி இரு அணிகளும் பெற்ற போதிலும் இறுதியில் பன்னாலை கணேசன் விளையாட்டுக் கழகம் 27:25 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

இரண்டாவது சுற்றில் இரு அணிகளும் கடுமையாக மோதிய போதிலும் ஐக்கிய விளையாட்டுக் கழகம் 27:25 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

மூன்றாவது சுற்று இரு அணிகளுக்கும் முக்கியம் வாய்ந்ததாகக் காணப்பட்ட போதிலும் கணேசன் விளையாட்டுக் கழகம் இச்சுற்றை மிகவும் இலகுவாக 25:13 புள்ளிகள் என்ற அடிப்படையில் வென்றது.

மூன்று சுற்றுக்கள் கொண்ட இந்தப் போட்டியை கணேசன் விளையாட்டுக் கழகம் 02:01 சுற்றுக்கள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனாகியது.

மூன்றாம் இடத்தை அளவெட்டி டயானா விளையாட்டுக் கழகம் பெற்றுக் கொண்டது. (50-86)

# ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சம்பியன்



வலி.வடக்கு, ஏப்.9

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றி பெற்றுச் சம்பியனாகியது.

உடுவில் மகளிர் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை திடலில் யாழ்ப்பாணக் கல்லூரி வீரர்களின் ஆதிக்கம் மேலோங்கிக் காணப்பட்டது. சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி முதல் தடவையாக இப்போட்டியில் பங்குபற்றிய போதிலும் தம்மாலான முயற்சிகளையும் அந்த அணி வீரர்கள் மேற்கொண்டமை பலராலும் பாராட்டப்பட்டது.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி பல பந்துகளை எதிரணியினரின் கூடையை நோக்கி வீசிய போதும் அவற்றினால் புள்ளிகள் பெறப்படவில்லை.

முதல்பாதி ஆட்டத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி 24: 02 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னணியில் இருந்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி 26:07 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னணியில் காணப்பட்டது.

ஆட்ட நிறைவில் யாழ்ப்பாணக் கல்லூரி 50:09 புள்ளிகள் என்ற அடிப்படையில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியை வென்று வலிகாமம் கல்வி வலய சம்பியனாகியது. (50-86)

# காரைநகர் யாழ்ற்ரனை வீழ்த்தி சம்பியனானது சென்.அன்ரனிஸ்

யாழ்ப்பாணம், ஏப்.9

தீவக வலய கரப்பந்தாட்டப் போட்டியில் 19 வயது ஆண்களுக்கான பிரிவில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி சம்பியனாகியது.

இறுதிப் போட்டியில் புனித அந்தோனியார் கல்லூரியும் காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியும் மோதிக்கொண்டன.

அனைவராலும் எதிர்பார்க்கப்பட்ட இவ்வாட்டத்தின் 1ஆம் சுற்றில் இரு அணிகளும் அனல் பறந்த ஆட்டம் ஆடினர். ஆனாலும் புனித அந்தோனியார் கல்லூரி அணி மிகவும் நுட்பமாகவும் திறமையாகவும் விளையாடித் தமது பலத்தை நிரூபித்து 25:22 என்ற செற் கணக்கில் யாழ்ற்ரனை வீழ்த்தி அசத்தியது.

பின்னர் இரண்டாம் சுற்றுக்கு இரு அணிகளும் ரசிகர்களின் உற்சாக வரவேற்போடு களமிறங்கின. ஆட்டம் ஆரம்பமாகியதும் புனித அந்தோனியார் கல்லூரி வீரர்கள் அசத்தலான ஆட்டம் ஆடினர். இந்த வீரர்களின் நுட்பமான ஆட்டம் யாழ்ற்ரன் கல்லூரி அணியை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ஆனாலும் யாழ்ற்ரன் கல்லூரி வீரர்களும் தைரியமாக விளையாடினார்கள்.

இறுதியில் 25:11 என்ற செற்கணக்கில் புனித அந்தோனியார் [illegible] வயது கரப்பந்தாட்ட தீவக [illegible]யது. (50-325)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்



காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசியர் கலாநிதி வே.[illegible] உரையாற்றுவதையும், கல்லூரி அதிபர் ந.பரமசிவம் மற்றும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (50-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவக்காலச் சிந்தனை



## நினைவுகளில் வாழ்தலும் நினைவுகளால் வாழ்தலும்

மனித வாழ்வுக்கு நினைவுகள் மிகவும் முக்கியமானவை. கருவானதிலிருந்து நாம் நினைவுகளில் தோய்ந்து போய் இருக்கின்றோம். துன்பமான நினைவுகள், இன்பமான நினைவுகள் என்று எல்லா விதமான நினைவுகளும் எமது மனதில் பதிவாகியிருக்கின்றன. இவ்வாறான தனிமனித நினைவுகளுக்கும் அப்பால் கூட்டு நினைவுகளும் காலங் காலமாக எம்மிடம் பதிவாகின்றன. தமிழராக எமது கூட்டு மனதில் பதிந்து விட்ட நினைவுகள், கிறிஸ்தவர்களாக, இந்துக்களாக, இஸ்லாமியராக எமது மனங்களில் பதிந்து விட்ட கூட்டு நினைவுகள். இவை எமது வாழ்வை அதன் திசையை நிர்ணயிக்கும் முக்கிய விடயங்களாகி விடுகின்றன.

சில, பல மொழிகளில் நாம் இந்த நினைவுகளில் மூழ்கி எம்மையே இழந்து விடுகின்றோம். நேரம் போவதே தெரியாமல் நினைவுகளில் வாழ்தல் என்பது எம் எல்லோருக்கும் பழக்கமான ஒரு விடயம்தான். அன்பாக வாழ்ந்த தம்பதியரில் ஒருவர் இறந்து விட்டால் மற்றவர் மீண்டும் ஒரு திருமணம் செய்ய மறுத்து அவரோடு வாழ்ந்த நினைவுகளே எனக்குப் போதும். அவற்றோடு நான் வாழ்ந்து விடுவேன் என்று கூறுவதையும் நாம் கேட்டிருக்கின்றோம். இது நினைவுகளில் வாழ்தல்.

ஆயினும் சில நினைவுகள் எமது வாழ்வினை உந்தித் தள்ளுகின்றன. ஒரு குறிப்பிட்ட அர்ப்பணத்திற்கு எம்மை நிர்ப்பந்திக்கின்றன. அந்த நினைவுகள் எம் வாழ்வை இயக்கும் மைய நிகழ்வுகளாக மாறி விடுகின்றன. வாழ்வில் நிகழ்ந்தவற்றின் நினைவுகளாக இருக்கலாம். எம்மைப் பாதிக்கும் அளவிற்கேற்ப குறிப்பிட்ட ஒரு வாழ்க்கை முறைக்கு அவை நம்மை நிர்ப்பந்திக்கின்றன.

யூத மக்கள் இவ்வாறான கூட்டு நினைவுகளோடு, வாழ்வதற்கு மிகவும் பழக்கப்பட்டவர்கள். தமது எகிப்திய அடிமைத்தன வாழ்விலிருந்து விடுதலை வாழ்வுக்கு இறைவன் தம்மை அழைத்துச் சென்றதை ''பாஸ்கா உணவு'' என்ற விடியலினூடாக தமது சந்ததியினருக்கு அவர்கள் கடத்தி வந்தனர். அந்த உணவிலே அவர்கள் தமது விடுதலைப் பயணத்தின் நினைவுகள் யாவையும் மீட்டுக் கொள்வர். அதை தமது இனத்தின் எதிர்கால வாழ்வுக்கு உந்துதல் தரும் ஒரு விடயமாக அவர்கள் ஆக்கி வைத்திருந்தனர்.

அத்தகைய ஒரு நினைவுகளின் கொண்டாட்ட விருந்துக்குத்தான் இயேசு புதிய அர்த்தம் கொடுக்கிறார். அதே பாஸ்கா விருந்துக்கு தமது சீடரோடு ஒன்று கூடும் இயேசு அந்த அப்பத்தையும், இரசத்தையும் தமது உடல், இரத்தம் எனக் கூறி புதிய ஒரு வாழ்விற்கான ஊற்றாக அந்த உணவை மாற்றி விடுகிறார். இயேசுவிற்கு பின்னாக இயேசு நம்புவோரின் வாழ்விலே அந்த உணவு இயேசுவில் நிகழ்ந்த அனைத்து விடயங்களினதும் உயிர்ப்பூட்டல் நினைவுகளாக மாறி விடுகிறது.

மறுநாள் கல்வாரி மலையில் தன்னையே உடைத்துக் கொடுத்த அவரின் நினைவாக அவர் வாழ்ந்த வாழ்வினதும், அவர் ஏற்றுக்கொண்ட மரணத்தினதும் உயிருள்ள நினைவாக அந்த விருந்து அமைந்ததனாலே காலாதிகாலமாக கிறிஸ்தவர்கள் அந்த உணவை உண்டு அவரது நினைவை மீட்டுக் கொள்கிறார்கள். அந்த நினைவுகளை மீட்டல் என்பது அவர் வாழ்ந்த திசையிலே வாழ்வதற்கும் அவரது அர்ப்பணங்களை தம்முடைய தாக்கிக் கொள்வதற்கும் கிறிஸ்தவர்களை நிர்ப்பந்திக்கின்றன.

ஆகவே ஒவ்வொருதிருப்பலி விருந்தும் வெறும் மந்திரச் சடங்கல்ல. இயேசுவின் வாழ்வை சமகாலத்திற்கும் வாழ்வதற்கான நினைவூட்டல் என்பதை மனதில் கொள்வோமாக.

அருட்பணி.ம.வி.இ.இரவிச்சந்திரன்.

## அன்பில் எதுவித கலப்பும் வேண்டாம்

இந்நாளில் முக்கியமாக நாம் செய்யவேண்டியது பிரேம தத்துவத்தை வளர்த்துக் கொள்ளவேண்டும். இறைவன் பிரேமையின் வடிவம். அத்தகைய பிரேமை வடிவமான இறைவன் அனைவருடைய இதயத்திலும் வசிக்கின்றான்.

மமாத்மா சர்வபூத அந்தராத்மா அனைவருள்ளும் இருப்பவன் நானே என்ற சத்யத்தை நம்பவேண்டும். அந்தப் பிரேமையைப் பத்துப் பேரிடமாவது பகிர்ந்து கொள்ள வேண்டும். அதுவே நமது வாழ்க்கையின் இலட்சியம். அந்த இலட்சியத்தை அடையவேண்டும்.

நாம் பாங்கிற்கு போகிறோம். காஷியரிடம் கோடிக் கணக்கில் பணம் இருக்கிறது. அவரிடம் சென்று ஐயா பணம் தாருங்கள் என்றால் பணம் தரமாட்டார். உன் பேரில் எவ்வளவு பணம் இருக்கின்றதோ அதற்கு ஒரு செக் எழுதிக் கொடுத்தால் அதற்குப் பணம் தருவார். பணமும் டிப்போசிற் செய்யாமல் செக்கும் தராவிட்டால் எப்படிப் பணம் கிடைக்கும். ஆகவே நீங்களும் உங்களது புனிதமான சிந்தனைகளை டிபாஸிட் செய்யுங்கள். பிரார்த்தனை என்ற செக்கைத் தாருங்கள். புனிதமான எல்லாவற்றையும் அடையுங்கள். அதுவே Cash (பணம், செல்வம்) பவித்திரமானவற்றை அடையப் பிரேமை அல்லது பிரார்த்தனை என்ற செக் தேவை.

ஒரு சிறிய உதாரணம், ஒரு ஸ்டாம்ப் ஒட்டி விலாசமெழுதி தபால் பெட்டியில் போட்டால் அக்கடிதம் விலாசதாரருக்குப் போய்ச் சேருகின்றது. அது அடுத்த ஊராகவும் இருக்கலாம். டெல்லியாகவும் இருக்கலாம். ஸ்டாம்ப்புக்குத் தூரம் முக்கியமில்லை. அப்படிப்பட்ட ஸ்டாம்ப் தான் நமது நம்பிக்கை. நமது பிரேமையை மேலெழுதும் விலாசம் விரேமையும் விலாசமும் இருந்தால் இடையே எத்தனை தூரம் இருந்தால் என்ன? உனதுகோரிக்கைகள் இறைவனைத் தானாக அடைகின்றன.

ஆகவே உங்களது அன்பைப் பரிபூரணமாக, பவித்திரமாக மாற்றிக்கொள்ளுங்கள். அன்பில் எவ்வித கலப்பும் கூடாது.



### சாயி சிந்தனை

## முதலாவது பிறந்ததின வாழ்த்து

கோப்பாய் தெற்கு, வீரபத்திர கோயிலடியைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ ரகுராமக் குருக்கள்- ஐசிந்தா தம்பதியரின்

**செல்வப் புதல்வி தேஜஸ்வினி**

தனது முதலாவது பிறந்ததின விழாவை இன்று வியாழக் கிழமை தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகின்றார். அவரை இறையருளால் சகல செல்வமும்,கல்விச் சிறப்பும் பெற்று சீருடன் வாழ்கவென அப்பா,அம்மா, தாத்தா ,பாட்டி, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், அத்தைமார், மச்சான்மார், மைத்துனர் சிவானுஜன் ஆகியோர் வாழ்த்துகின்றார்கள்.

தாத்தா
சிவஸ்ரீ சோ.கி.பிரணதார்த்திஹரக் குருக்கள்.
கோப்பாய்.






(84241)

## சுஜீவா வைத்தியசாலை அறிவித்தல்

25ஆவது அனுராதபுர பாரம்பரிய களத்தாவ, பாலிநகர் மற்றும் காரைநகரில் முன்னர் கிளைகளைக் கொண்டிருந்த பக்கவிளைவில்லாத இந்திய, இலங்கை சித்த ஆயுள்வேத தமிழரச பாரம்பரிய சுதேச மருத்துவ முறைகள் மூலம் தீராத் நோய்களை நீக்குவதிலும் விசேடமாக குழந்தையின்மை சிகிச்சையில் பிரபலமானதுமான சுஜீவா வைத்தியசாலை தற்போது இல.6, கலட்டி அம்மன் கோயில் வீதி, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் (தட்டாதெரு சந்திக்கு அருகில்) எனும் முகவரியில் மட்டுமே இயங்கிவருகிறது.

★ பொறுப்பு வைத்தியர்: திருமதி ச.ஜெயலன் DAM.RIMP
★ ஏனைய வைத்தியர்கள்: K.O. இராஜரட்ணம், ஜெ.ஜெயலன்
★ பார்வையிடும் நேரம்: காலை 6.00-11.00 தொ.பே.: 0775594147
மாலை 3.00- 6.00 தொ.பே.: 0772487044
★வெள்ளிக்கிழமை விடுமுறையாகும்.

குறிப்பு: குழந்தையின்மை சிகிச்சை பெற வருபவர்கள் தயவுசெய்து காலையில் வரவும்.

(சி/557879) Dr.ஜெ.ஜெயலன்.

### உயர்தர வகுப்பு அனுமதிக்கு விண்ணப்பம்

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் ஜி.சீ.ஈ. (உ/த) வகுப்புக்கான அனுமதிப் பிரிவு 2011 இற்கான கலை, வர்த்தக, விஞ்ஞான வகுப்புகளுக்கான அனுமதிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### வான் ஒன்றை வாடகைக்கு வழங்கக்கூடியவர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உத்தியோகபூர்வ தேவைக்காக பயன்படுத்துவதற்கு வான் ஒன்றை அவ்வாகனத்திற்கான சாரதி, எரிபொருள் ,காப்புறுதி, திருத்தவேலைகள் போன்றவற்றை உள்ளடக்கியதாக கிலோமீற்றர் அடிப்படையில் வழங்கக்கூடிய வாகன உரிமையாளரிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் 2009.04.30 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிவரை பல்கலைக்கழக கேள்விச்சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

மீளளிப்புச் செய்யப்படாத வைப்புப்பணமாக ரூபா 300 பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் செலுத்திப் பெற்ற பற்றுசீட்டை உதவிப்பதிவாளர், நிர்வாகம் அவர்களிடம் சமர்ப்பித்து 2009.04.24 ஆம் திகதி வரை கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரப் படிவங்களை 2009.04.30 பிற்பகல் 2.30 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபாலில் **தலைவர் , கேள்விச்சபை , யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், திருநெல்வேலி** என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம். நேரடியாக சமர்ப்பிக்க விரும்புவோர் மேற்குறித்த காலவரையறைக்குள் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடலாம். கேள்விப்பத்திரப் படிவம் மற்றும் நிபந்தனை விவரங்களை நிர்வாகக் கிளையில் உதவிப் பதிவாளரிடம் தொடர்பு கொண்டு பார்வையிடலாம். பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

பதிவாளர்.

(சி/557881)

## போயா தின ஆன்மீக நிகழ்வு இன்று அதிகாலை முதல்

யாழ்ப்பாணம், ஏப்.9

யாழ்.பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் இன்று வியாழக்கிழமை அதிகாலை 5 மணிக்கு நகரசங்கீர்த்தனம் நிகழ்வு இடம் பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து அன்றைய தினம் காலை 9 மணிக்கு ஓங்காரம், வேதபாராயணம், தியான சேவை ஆகிய நிகழ்ச்சிகளுடன் பிற்பகல் 12.30 மணிக்கு நிகழ்வுகள் நிறைவு பெறவுள்ளன.

சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று காலை 7.30 மணிக்கு விசேட பஜனை இடம்பெறவுள்ளதாக ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையச் செயலாளர் அறிவித்துள்ளார். (50-201)

## தென்மராட்சியில் 3 'கோப்சிற்றி'கள்

யாழ்ப்பாணம், ஏப்.9

தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் மேலும் மூன்று கோப்- சிற்றிகளை ஆரம்பிக்கவுள்ளனர்.

மந்துவில் மத்தி, அல்லாரை, இடைக்குறிச்சி ஆகிய இடங்களில் கோப் சிற்றி நிலையங்கள் அமைக்கப்பட்டு வருவதாகவும் சித்திரைப் புத்தாண்டுத் தினத்தன்று இவை ஆரம்பிக்கப்படுமென சங்கப் பொது முகாமையாளர் சி.தேவகுமார் தெரிவித்தார். (50-207)

## யாழ்ப்பாண சுதேச மருத்துவ மாநாடும் கண்காட்சியும்

காலம்: 18.04.2009, 19.04.2009

இடம்: லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி
127, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

பல தசாப்தங்களின் பின் சுதேச-பரம்பரை சித்த ஆயுள்வேத யாழ்ப்பாணத்திற்குரிய செகராஜசேகரம் பரராஜசேகரம் முதலிய மருத்துவ முறைகளை வளர்ப்பதற்கும் இம்முறைகளை இணைத்து போதனை செய்யும் இலங்கையிலேயே முதன்முதல் உருவான தமிழர்களின் சொத்தான லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியை முன்னேற்றுவதற்கும் வடமாகாண சுதேச மருத்துவர்களின் உரிமைகளையும் தேவைகளையும் இனங்கண்டு நிறைவேற்றுவதற்காகவும் நல்ல பொதுநோக்கத்திற்காக பேதங்களையும் ,பகைமைகளையும் மறந்து பரம்பரை சித்த ஆயுள்வேத வைத்தியர்களையும் வைத்தியர்களின் வாரிசுகளையும் இதில் நாட்டமுள்ள நலன் விரும்பிகளையும் லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியுடன் தொடர்புபட்ட அனைவரையும் ஓரணியில் திரட்டுவதற்காகவும் இம்மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இம் மாநாட்டுக்கும் கண்காட்சிக்கு (மூலிகைகள், ஓலைச் சுவடிகள், நூல்கள் மருந்துகள் உட்பட) தங்களது பங்களிப்பு (பிரேரணை/ கண்காட்சிப் பொருள்/ அனுசரணை) வழங்குவது பற்றி 16.04.2009)இற்கு முன்னர் தொடர்புகொள்ளுமாறு வேண்டுவதோடு, குடும்ப சீட பரம்பரையாக சுதேச மருத்துவம் (மணி, மாந்திரீகம், ஔசத) மருத்துவம் செய்து வருபவர்களும் உடனடியாக தொடர்புகொள்ள வேண்டுகின்றோம்.

கௌரவ செயலாளர் ஜெ.ஜெயலன்
வட இலங்கை சுதேச மருத்துவ சபை.
தொ.பே.: 021459 1572
0772487044
0775594147

தொடர்பு முகவரி:
லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி
127, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/557878)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்துகளின் துடுப்பாட்டம் சமநிலையில் முடிந்தது

வலி.வடக்கு, ஏப்.9

இந்துகளின் பெரும் துடுப்பாட்டப் போர் வெற்றி தோல்வி இன்றி சம நிலையில் முடிவுற்றது.

நேற்றைய தினம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி தமது முதலாவது இன்னிங்சுக்கான துடுப்பாட்டத்தை ஆரம்பித்தது. 67.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 170 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

பிரியதர்சன் 66, பவசுதன் 36, உமாதரன் 18, நிரூஜன் 10 ஓட்டங்களை பெற்றுக் கொண்டதுடன் உதிரிகளாக 22 ஓட்டங்களும் பெறப்பட்டன.

கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த கே.நிரோஜன் 16 ஓவர்கள் பந்து வீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 34 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் எஸ். நிரோஜன் 21 ஓவர்கள் பந்து வீசி 04 ஓட்டமற்ற ஓவர்களுடன் 46 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், பங்கஜன், பவீந்திரன் முறையே 14, 18 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

120 ஓட்டங்களினால் முன்னிலையில் நின்ற கொக்குவில் இந்துக் கல்லூரி இரண்டாவது இனிங்சுக்காக துடுப்பெடுத்தாடி 23 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்து 84 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டம் நிறைவுபெற்றது.

பங்குஜன், ஜனார்த்தனன் ஆட்டமிழக்காது இருவரும் முறையே 36,30 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்கள்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சார்பில் திருத்தணிகன் 08 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 34 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை கைப்பற்றினார்.

போட்டியின் சிறந்த களத்தடுப்பாளராக ஆர்.பவீந்திரன் (கொ.இ.கல்லூரி) சிறந்த பந்து வீச்சாளராக கே.நிரோஜன் (கொ.இ.கல்லூரி) ஆட்டநாயகனாக சி.உத்தமகுமாரன் (கொ.இ.கல்லூரி) சிறந்த துடுப்பாட்ட வீரராக எ.பிரியதர்சன் (யா.இ. கல்லூரி) தெரிவுசெய்யப்பட்டனர்.

(1-86)

## மாட்டுவண்டில் சவாரிப்போட்டி

யாழ்ப்பாணம், ஏப்.9

வசந்த விழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட மெய்வன்மை சங்கம் நடத்தும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி எதிர் வரும் 12 ஆம் திகதி பி.ப. 12.30 மணிக்கு நீர்வேலி மாட்டுவண்டி சவாரித் திடலில் நடைபெறவுள்ளது. மேற்படி போட்டி நான்கு பிரிவுகளாக நடத்தப்படும்.

(1)

# நாயகர்களின் துடுப்பாட்டத்தில் மகாஜனா பலமான நிலையில்

வலி.வடக்கு, ஏப்.9

'நாயகர்களின் பெரும்' போர் எனக் அழைக்கப்படும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் இடையேயான இரண்டு நாள் துடுப்பாட்டப் போட்டி மிகவும் எளிமையான முறையில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நேற்று ஆரம்பமாகியது.

பூவா தலையா போட்டதில் வெற்றி பெற்ற மகாஜனக்கல்லூரி துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி முதல் ஆறு ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்ததுடன் நான்கு ஓட்டங்களைப் பெற்று சற்றுத்தடுமாறியது. ஆனாலும் தொடர்ந்து வந்த வீரர்கள் இந்த நிலைக்கு முற்றுப்புள்ளிவைத்து அடித்து விளையாடினார்கள்.

57.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 235 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்கள்.

கோகிலதாஸ் 59 பந்துகளில் எட்டு நான்குகளுடன் 51, கபிலன் ஐந்து நான்குகளுடன் 32, தயாளன் ஆட்டமிழக்காது 25, நிக்ஷன் 28, பார்த்தீபன் 24, கஜதீபன் 17, கபில்தேவ் 15 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டதுடன் உதிரிகளாக 33 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஸ்கந்தவரோதயக் கல்லூரியைச் சேர்ந்த தஜீகன் 15 ஓவர்கள் பந்துவீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 75 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், விஷ்ணுபிரகாஸ் 21.5 ஓவர்கள் பந்து வீசி 04 ஓட்டமற்ற ஓவர்களுடன் 56 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் ரஜீந்தன் 05 ஓவர்கள் பந்து வீசி 33 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், கௌதமன், தரணன் முறையே 22, 05 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்காத நிலையில் 22 ஓவர்களில் 07 விக்கெட்டுக்களை இழந்து 62 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் முதல்நாள் ஆட்டம் நிறைவு பெற்றது.

தரன், விஷ்ணு, பிரகாஸ் தலா 10 ஓட்டங்களைப் பெற்றுள்ளதுடன் பிரதிவீகன் 17 புருஷோத்தமன் ஆகியோர் ஆட்டமிழக்காது துடுப்பாட்டத்தில் இன்று ஈடுபடவுள்ளார்கள்.

மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த கஜதீபன் 09 ஓவர்கள் பந்துவீசி 04ஓட்டமற்ற ஓவர்களுடன் 27 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களையும் கோகுலன் 05 ஓவர்கள் பந்துவீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 14 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், விஷ்ணுகரன் 03 ஓவர்கள் பந்து வீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 09 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

நேற்றைய ஆட்டத்தில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் விக்கெட்காப்பாளர் ஸ்ரீகஜன் 04 பிடிகளை எடுத்ததுடன் 05 பேரை ஆட்டமிழக்கச் செய்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இன்று போட்டி காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் போது ஸ்கந்தவரோதயக் கல்லூரி தொடர்ந்து துடுப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளது.

(1-86)

# ஈழத் தமிழரின் தலைமேல் நச்சுக்குண்டு; தமிழக மக்கள் பொங்கியெழ வேண்டும்!

## டாக்டர் ராமதாஸ் வேண்டுகோள்



சென்னை, ஏப்.9

இனிமேல் தாமதிக்கும் ஒவ்வொரு நொடியும் இலங்கைத் தமிழர்களின் தலையின் மேல் நச்சு வாயுக் குண்டுகள் இடியாய் விழப்போகின்றன. தமிழர்கள் கூட்டம் கூட்டமாகச் செத்து மடியப் போகின்றனர். எனவே, நமது சொந்தங்கள் கூண்டோடு மடிவதைத் தடுக்க, தமிழக மக்கள் ஒன்றுபட்டு பொங்கி எழுந்து குரல் கொடுக்க வேண்டும் - என்று பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கையில் தமிழ் இனத்தைக் காப்பாற்றுக என்று கண்ணீர் மல்கக் கேட்கிறோம் என்று இந்திய பேரரசுக்கு வேண்டுகோள் விடுக்கும் தீர்மானம் இந்த ஆண்டு ஜனவரியில் தமிழ்நாடு சட்டப்பேரவையில் முதலமைச்சரால் முன்மொழியப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. ஆனால், எதுவும் நடக்கவில்லை.

இந்தியப் பேரரசு அசைந்து கொடுக்கவில்லை. பேசியிருக்கிறோம், சொல்லியிருக்கிறோம், வேண்டுகோள் விடுத்திருக்கிறோம். வற்புறுத்தியிருக்கிறோம் என்று சொல்லி, காலத்தைக் கடத்தி வந்திருக்கிறார்களே தவிர, இலங்கையில் போர் நிறுத்தப்படுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்த அவகாசத்தில் இலங்கையில் தமிழினம் தொடர்ந்து அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இதுவரையில் நாள்தோறும் நடந்தேறிய கொடுமைகளைவிட, இனிமேல் நடக்கப் போவது கொடுமையிலும், கொடுமையாக இருக்கப் போகின்றது என்று தமிழர்களையெல்லாம் கலங்க வைக்கும் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன.

புதுக்குடியிருப்புப் பகுதி முழுவதும் தங்கள் வசம் வந்துவிட்டது எனவும், இனி பாதுகாப்பு வலயம் மட்டுமே எஞ்சியுள்ளது எனவும் இலங்கை ஜனாதிபதியும், அவரது பிரதானிகளும் அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பாதுகாப்பு வலயத்திற்குள் போராளிகளும் இருக்கிறார்கள் என்று திட்டமிட்டு அவர்களால் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது.

அதைக் காரணமாகக் காட்டி பாதுகாப்பு வலயத்திற்குள் சிக்கியிருக்கும் இரண்டரை லட்சம் தமிழ் மக்களின் உயிரைப் பொருட்படுத்தாமல், பெருமளவிலான தாக்குதலை நடத்துவதற்கு மனிதநேயமற்ற மாபாவிகள் திட்டம் தீட்டிக் கொண்டிருக்கிறார்கள். பாதுகாப்பு வலயத்தை ஐந்து முனைகளிலிருந்து சுற்றிவளைத்து ஒரே சமயத்தில் தாக்குதல் நடத்தப்போகிறோம் என் இலங்கை இராணுவத் தளபதி கூறியிருக்கிறார்.

இனி தாமதிக்கும் ஒவ்வொரு நொடியும் இலங்கைத் தமிழர்களின் தலையின் மேல் நச்சு வாயுக் குண்டுகள் இடியாய் விழப்போகின்றன. தமிழர்கள் கூட்டம் கூட்டமாகச் செத்து மடியப் போகிறார்கள். இந்த கொடுமை நடந்தேறினால், உலகில் இதுவரையில் நடந்திராத இனப் படுகொலை இலங்கையில் அரங்கேறிவிடும்.

இந்த ஆபத்தை எப்பாடுபட்டேனும் தடுத்தாக வேண்டிய கடமையும், பொறுப்பும் தாயகத்துத் தமிழர்களுக்கு இருக்கிறது. இந்தியாவில் உள்ள தமிழ்நாடு என்ற மாநிலத்தில் நாம் வாழ்கின்றோம். அதனால், நம்மை அரவணைத்துக் காத்திடும் பொறுப்பை இந்தியப் பேரரசு பார்த்துக் கொள்ளும் என்ற உரிமையோடு எதிர் பார்க்கிறோம். - என்றுள்ளது.

## சிரஞ்சீவி - அமர்சிங் சந்திப்பு ஆந்திராவில்... ஆவது அணி!

ஐதராபாத், ஏப். 09

தேசிய அளவில் 4ஆவது அணியை உருவாக்கும் முயற்சியில் இறங்கியுள்ளோம் - என்று சமாஜ்வாடி கட்சியின் பொதுச்செயலாளர் அமர்சிங் தெரிவித்துள்ளார்.

ஆந்திராவில் பிரஜா ராஜ்யம் கட்சித் தலைவர் சிரஞ்சீவியைச் சந்தித்துப் பேசிய பின்னரேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பிரஜா ராஜ்யம் கட்சித் தலைவர் சிரஞ்சீவி முதன் முதலில் மக்களவை, சட்டப் பேரவை தேர்தல்களைச் சந்திக்கவுள்ளார். அக்கட்சியின் வேட்பாளர் பட்டியலை கடந்த வாரம் அவர் வெளியிட்டார். விஜயவாடா மக்களவைத் தொகுதி வேட்பாளராக சனுமாலா ராஜுவ் என்பவரை களம் இறக்கியுள்ளார். சனுமாலா ராஜுவ், சமாஜ்வாடி கட்சியின் பொதுச்செயலாளர் அமர்சிங் மற்றும் நடிகர் சஞ்சய் தத் ஆகியோருக்கு மிகவும் நெருக்கமானவர் எனக் கூறப்படுகிறது.

இதையொட்டி, சனுமாலா ராஜுவ் அழைப்பின் பேரில் அமர்சிங், சஞ்சய் தத் ஆகியோர் விஜயவாடாவுக்கு வந்து அவரை சந்தித்தனர். பின்னர் மூவரும் ஐதராபாத் சென்று பிரஜா ராஜ்யம் கட்சித் தலைவர் சிரஞ்சீவியைச் சந்தித்தனர்.

# இலங்கைக்கு இந்தியா துணை நின்றால் தேர்தல் முடிவைப் பெரியளவில் பாதிக்கும்

## திருமாவளவன் எச்சரிக்கை



சென்னை, ஏப். 09

இந்திய அரசு, இலங்கைக்குத் துணை நின்றாலும் அல்லது கண்டுகொள்ளாமல் மெத்தனமாக இருந்தாலும் மிகப்பெரும் அளவில் தேர்தல் முடிவுகளைப் பாதிக்கும் - என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், இலங்கை அரசைக் கண்டித்து இன்று 9 ஆம் திகதி சென்னையில் ஆர்ப்பாட்டம் நடத்த இருக்கிறோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

முல்லைத்தீவில் பாதுகாப்பு வலயம் என்று அறிவிக்கப்பட்ட பகுதியிலும் நச்சுப்புகைக் குண்டுகள் வீசப்பட்டு பொதுமக்கள் கொத்துக் கொத்தாகப் படுகொலை செய்யப்படுகின்றனர். இரண்டாம் உலகப் போரின் போது கூட செய்வதற்கு அஞ்சிய கொடூரம் ஈவிரக்கமின்றி ஈழத் தமிழினம் மீது நடக்கிறது. இந்த நிலையிலும் இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகம் அமைதி காத்து வேடிக்கை பார்ப்பது நெஞ்சைப் பதற வைக்கும் கொடுமையாக இருக்கிறது.

தமிழக மக்களின் சார்பில் தொடர்ந்து முன் வைக்கப்படும் இந்தக் கோரிக்கையை இனியும் புறந்தள்ளாமல் இந்திய அரசு இலங்கைக்கு [illegible] உடனடியாகப் போரை [illegible] செய்ய வேண்டும்.- என்றுள்ளது

# சிதம்பரம் மீது சப்பாத்து வீசிய செய்தியாளருக்கு ரூ. 2 லட்சம் பரிசு!

## தேர்தலில் நிறுத்தவும் சீக்கிய அமைப்புகள் முடிவு

புதுடில்லி, ஏப். 09

உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் மீது சப்பாத்து வீசிய செய்தியாளர் ஜர்னைல் சிங்குக்கு ரூபா 2 லட்சம் பரிசு வழங்கப்படும் என டில்லியில் உள்ள சீக்கிய அமைப்புகள் அறிவித்துள்ளன.

இந்திரா காந்தி படுகொலையின்போது நடந்த சீக்கியருக்கு எதிரான கலவரம் தொடர்பான வழக்கில் இருந்து காங்கிரஸ் தலைவர்கள் ஜெகதீஷ் டைட்லர், சஜ்ஜன் குமார் ஆகியோர் விடுவிக்கப்பட்டு உள்ளனர். அந்த வழக்கில் சி.பி.ஐ. நடவடிக்கை குறித்து உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் அளித்த பதில் திருப்தி அளிக்காததால் அவர் மீது சீக்கிய மதத்தை சேர்ந்த ஜர்னைல் சிங் என்ற செய்தியாளர், சப்பாத்தைக் கழற்றி எறிந்தார்.

இந்த நிலையில், ஜர்னைல் சிங்குக்கு ஏராளமான சீக்கிய அமைப்புகள் ஆதரவு தெரிவித்து வருகின்றன. மேலும், அவருக்கு ரூ.2 லட்சம் பரிசு கொடுத்து கௌரவிப்பதாக டில்லியிலுள்ள அமைப்புகள் அறிவித் திருக்கின்றன.

இதுகுறித்து டில்லி மாநகராட்சி கவுன் ஸிலர் மஞ்சிந்தர் சிங் கூறுகையில் -

கடந்த 24 ஆண்டுகளாக சீக்கியர்களுக்கு நீதி மறுக்கப்பட்டு வருகிறது. அவர்களுடைய ஆழ்ந்த கோபத்தையும், வலியையுமே ஜர்னைல் சிங் வெளிப்படுத்தியிருக்கிறார். அவருக்கு ரூ. 2 லட்சம் அளித்து கௌரவிக்க சீக்கிய அமைப்புகள் முடிவு செய்துள்ளன. தனிப்பட்ட நபர்கள் மற்றும் அமைப்புகளிடம் இருந்து இந்தத் தொகை திரட்டப்படும் - என்றார்.

இதுதவிர, ஜர்னைல் சிங்கின் வழக்கு செலவுக்காக ரூபா ஒரு லட்சம் வழங்குவ[illegible]அகாலி தளம் கட்சி அறிவித்தது. தற்போது அவர் மீது வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்பதால், அந்த தொகையை அவரிடமே வழங்க முடிவு செய்துள்ளது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி புவனேஸ்வரி
சீவரத்தினம் அவர்களின்
அன்புத் தாயார்

**மகேஸ்வரி ஆறுமுகம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம், அச்செழு.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கனகராசா பாக்கியம்



சங்கானை, காளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகராசா பாக்கியம் (06.04.2009) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலம் - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கனகராசாவின் (சீனியர்-வாகனம் திருத்துநர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளையின் சகோதரியும் நாகராணி, ஆனந்தராணி, மகேந்திரராசா (லிபியா), சிறிவரதராசா (ஜேர்மனி), நாகேந்திரராசா (ஜேர்மனி), செந்தில்ராசா (கடைச்சல் தொழிலகம், சங்கானை), மதிபாலராசா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் நல்லநாதன் (சீனியர் இரும்புத் தொழிலகம்,சங்கானை), கந்தசாமி (அம்பாள் இரும்பகம், திருநெல்வேலி), கருணாவதி, நகுலாம்பிகை (ஜேர்மனி), நவமலர் (ஜேர்மனி), புவனேஸ்வரி,சுகந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், நந்தினி (சுவிஸ்), குமுதினி (பிரான்ஸ்), சாமினி (சுவிஸ்), அகில்ராஜ் (பொறியியல் பீட மாணவன், இறுதிவருடம்), நிசாந்தினி, சிவகௌரி, பிரதீபன், நிதர்சன், திவ்யா, தனுசன், தருஷனா, சபரிஷ்னா, லக்ஷனேஷ், ஜெயசாந், லோகிசாந், கபிலாஸ், கிரிராஜ், ரவிராஜ், ரகுராஜ், கீர்த்திகன், நிவேதிகன், சங்கவி, ஜெதுர்சினி, துளாசினி ஆகியோரின் பேர்த்தியாரும் சஜிவிதா, கிந்துஷன், கஜனிகா, நிவேதா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2009) வியாழக்கிழமை மு.ப.11.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விளாவெளி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாளியவத்தை,
சங்கானை மேற்கு.

தகவல்:
மக்கள், மருமக்கள்.


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1078 நீலம்

வெற்றி இலக்கங்கள்

12 19 26 41

மகரம்

07-04-2009

செல்லுபடியாகும் தொடர் இல. 400024001 - 400044672

ஜக்பொட் பரிசு ரூபா. 2,986,950/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 223,432 | 20/- | 4,468,640/- |
| 2 இலக்கங்கள் | 20,592 | 40/- | 823,680/- |
| 1 இல. + லக்கினம் | 20,309 | 60/- | 1,218,540/- |
| 2 இல. + லக்கினம் | 1,890 | 200/- | 378,000/- |
| 3 இலக்கங்கள் | 539 | 1000/- | 539,000/- |
| 3 இல. + லக்கினம் | 50 | 10,000/- | 500,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,986,950/- | - |
| மொத்தம் | | | 8,327,860/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 266,819 | | 8,827,860/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 3,984,250/-

2009 ஏப்ரல் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| நுவரெலியா | 400025752-1-33 |
| கம்பஹா | 400041199-0-20 |
| பதுளை | 400026915-6-09 |
| கொழும்பு | 400038934-7-24 |
| குருநாகல் | 400040763-5-47 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02



# ENGLISH
Gr 6 -G.C.E O/L & A/L
SPOKEN ENGLISH
By:- Mr.K.Ramanathasan

# ICT - GIT
Grade 10/GCE (O/L) & A/L
By:- Mr. S. Branavan

## Basic Computer for Kids
Grade 5 - Grade 9
Mrs. A.J. Anusha

## Mathamatics
Grade 9, 10 & GCE (O/L)
Mr. Suresh

## Tamil Language
Grade 9, 10 & GCE (O/L)
Mr. S.Navaneethakrishan
Personal & Group Classes
Computrized Classrooms

IECE 121/1, அரசடி வீதி, கந்தர்மடம்.
TP: 222 7845


## வாகன விபத்துக்களில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஏப்.9

வாகன விபத்துக்களில் சிக்கி இருவர் காயமடைந்தனர். நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இவ் விபத்துக்கள் இடம்பெற்றன.

மீசாலைப் பகுதியில் ஓட்டோ வாகனம் வீதியோர மரத்துடன் மோதியதில் அதில் பயணித்த யோ.சாந்தகுமார் (வயது - 20) என்பவருக்கு கை முறிந்தது.

கச்சாய்ப் பகுதியில் வீதியின் குறுக்கே ஓடிய ஆட்டுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் தூக்கி வீசப்பட்டு பீ.தினேஸ் (வயது - 20) என்பவருக்கு கால் முறிந்தது.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (1-207)

## கல்வியியற் கல்லூரி நேர்முகப்பரீட்சை ஆரம்பம்

அச்சுவேலி, ஏப்.9

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியில் இந்த வருட மாணவர் அனுமதிக்கான-நேர்முகப்பரீட்சைகள் நேற்று ஆரம்பமாகின. எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை வரை இப் பரீட்சை நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இருந்து வெளிமாவட்டங்களில் உள்ள கல்வியியல் கல்லூரிகளுக்கு அனுமதிகள் பெறவுள்ள மாணவர்களுக்கும் யாழ். தேசியக் கல்வியியற்கல்லூரியிலேயே நேர்முகப் பரீட்சைகள் நடைபெறுகின்றன. இந்த வகையில் சுமார் 500 பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.தேசியகல்வியியல் கல்லூரியில் நடைபெறும் 12 பாடத்துறைசார்ந்த ஆசிரியர் பயிற்சிக்கு 240 மாணவர்கள் வரை இந்த வருடம் அனுமதிக்கப்படவுள்ளனர்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியில் நேர்முகப் பரீட்சைகள் கல்லூரி பீடாதிபதி கே.யோகநாதன் தலைமையில் நடைபெற்று வருகின்றன. (1-11)


## ஆங்கிலம்
G.C.E O/L (2009)
பகல்நேர வகுப்புக்கள்
ஆரம்பம்:- 10.04.2009
அடிப்படை ஆங்கிலம்
மாதிரிப் பரீட்சைகள்
கடந்தகால வினாவிடை மீட்டல்
உயர்ந்த பெறுபேறு உத்தரவாதம்
By: Mr.K.Ramanathasan
IECE 121/1, அரசடி வீதி, கந்தர்மடம்.


## சைவ வித்தியா விருத்திச் சங்கம் ஆண்டுப் பொதுக் கூட்ட அறிவித்தல்

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் 10.05.2009 ஆம் நாள் நடைபெறும். அங்கத்தவர்களைத் தமது உறுப்புரிமையை 25.04.2009க்கு முன் புதுப்பித்துக் கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டிய பிரேரணைகள் 25.04.2009க்கு முன் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி

க.வை.குணசேகரம்,
செயலாளர்.

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 20 ★ 01 ★ 1937



விண்ணில் 13 ★ 04 ★ 2006

**K.V. வேலுப்பிள்ளை (தவம்)**

(ஓய்வு பெற்ற உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்)

நாங்கள் அழுகின்றபோது - எம்முள்
எழுகின்ற உணர்வுகளை - இனி
உங்களுக்குச் சொல்ல முடியவில்லை
எத்தனை ரணங்கள் - அந்த
ஒவ்வொரு கணங்களுக்கும்
கரைகின்றோம் உங்களுடன்
உங்கள் நினைவுகள் எம்முடன்
நீங்கள் இன்றோ இறைவனிடம் !

பழைய வீதி,
கோப்பாய் தெற்கு.

குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலையில்
கதிரியக்கவியலாளராக (Radiographer) கடமையாற்றும்
எஸ்.தயாபரன் அவர்களின் தாயார்

**திருமதி சாவித்திரிதேவி சிவயோகநாதன்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருடன் எமது துயரைப் பகிர்கின்றோம்.

சக ஊழியர்கள், கதிரியக்கப் பிரிவு (Xray),
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.


# புதிய கட்டடத் திறப்பு விழா

நிகழும் மங்களகரமான சர்வதாரி வருடம் பங்குனித் திங்கள் 27ம் நாள் (09-04-2009) வியாழக்கிழமை அன்று காலை 9:00மணி முதல் 10:08 வரையான சுப முகூர்த்த வேளையில் NORTH LANKA IIT நிறுவனமானது #113, Laxan Plaza, Navalar Road, Jaffna என்னும் முகவரியில் தனது யாழ்ப்பாணக் கிளையை திறந்துவைக்கவுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.






பிரதம விருந்தினர்
திரு.ப.விக்னேஸ்வரன் அவர்கள்
Director, Zonal Education Department, Valikamam Zone
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

இயக்குனர்

புதிய கட்டடத் திறப்புவிழாவை முன்னிட்டு
09-04-2009 தொடக்கம்
16-04-2009 வரை

**B.Sc. in Computer Science**

**B.Sc. in Multimedia**

கற்கைநெறிகளுக்கு பதிவுசெய்யும் மாணவர்களுக்கு
ரூபா 10000.00 இலவசம்!!!


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகநாடுகளில் வாழும் புலம்பெயர்ந்த தமிழர்கள் மூன்றாவது நாளாக ஆர்ப்பாட்டம்; வீதிமறியல்!

லண்டன், ஏப்.8

இலங்கையில் யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தி வன்னியில் உள்ள பொதுமக்களைப் பாதுகாக்க சர்வதேசம் உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தி உலகநாடுகள் எங்கும் புலம்பெயர்ந்து வாழுகின்ற உலகத் தமிழர்கள் அலைகடல் எனத் திரண்டு மூன்றாவது நாளாக நேற்றும் போராட்டங்களை நடத்தினர்.

**பிரிட்டனில் 500 க்கும் மேற்பட்டோர் தொடர் போராட்டம்**

வன்னியில் மோதலில் சிக்கியுள்ள மக்களைப் பாதுகாப்பதற்காக பிரிட்டிஷ் அரசு உடனடியாகத் தலையிட வேண்டுமெனக் கோரி அந்த நாட்டின் நாடாளுமன்றம் முன்பாகப் புலம்பெயர்ந்த தமிழர்கள் தொடர்ந்து மூன்றாவது நாளாகப் புதன்கிழமையும் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். பொலிஸார் கடும் எச்சரிக்கையை விடுத்துள்ள போதிலும் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுகின்றன.

கடந்த செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டக்காரர்கள் பலரைப் பலவந்தமாக அகற்றிய பொலிஸார் நாடாளுமன்றத்தின் முன்றிலிலிருந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் வெளியேறாவிட்டால் மேலும் பலர் கைதுசெய்யப்படலாம் என எச்சரித்துள்ளனர். எனினும் சுமார் 500 பேர் தொடர்ந்தும் நாடாளுமன்றம் முன்பாக ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர்.

உடனடி யுத்தநிறுத்தத்துக்கு அழைப்பு விடுப்பதுடன் தமிழ்மக்களைப் பாதுகாக்க பிரிட்டிஷ் அரசு உடனடியாகத் தலையிட வேண்டுமெனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள ஈழத் தமிழர்கள் வலியுறுத்துகின்றனர். பிரிட்டிஷ் அரசிடமிருந்து உறுதியான உத்தரவாதம் கிடைக்கும் வரை தாங்கள் தங்களது போராட்டத்தைக் கைவிடப் போவதில்லையென்று தெரிவித்துள்ளனர். 'படுகொலைகள் தொடரும் வரை நாங்கள் இங்கிருப்போம்' என ஆர்ப்பாட்டக்காரர் ஒருவர் ஏ.எவ்.பி. செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளார். இலங்கையில் குண்டுவீச்சுகள், படுகொலைகள் இடம்பெறுகின்றமையாலேயே நாங்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டுள்ளோம். இலங்கையில் தற்போது இரசாயனக் குண்டுகளும் பயன்படுத்தப்படுகின்றன என பிரிட்டிஷ் தமிழ் போரத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, செவ்வாய்க்கிழமை பிரிட்டிஷ் பொலிஸார் தம்மீது கடுமையாக நடந்து கொண்டனர் எனப் புலம்பெயர்ந்த தமிழர்கள் குறிப்பிட்டுள்ளனர். "அவர்கள் மிக மோசமாக நடந்து கொண்டார்கள். பெண்களைத் தள்ளி வீழ்த்தினார்கள். இளைஞர்களைத் தாக்கினார்கள்" என லண்டன் தமிழர்கள் தெரிவித்துள்ளனர்.

**ஜேர்மனியில் பொலிசாருடன் மக்கள் இழுபறி**

செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு ஜேர்மனியின் டுசில்டோவ் மாநிலத்தில் அமைந்துள்ள மாநில நாடாளுமன்றம் அருகில் உள்ள மேம்பாலத்திற்கு கீழே மக்கள் ஒன்று கூடினர்.

பின்னர் அங்கிருந்தவாறு நாடாளுமன்றம் முன்பாக அணிதிரண்டு தமிழினப் படுகொலையை ஜேர்மனி தடுத்து நிறுத்தவேண்டும் எனக் கோரி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் நாடாளுமன்றினுள் நுழைய முற்பட்டபோது பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களுக்கும் இடையில் இழுபறி நிலைஏற்பட்டது.

இதன்போது யுவதி ஒருவர் பொலிஸாரின் தாக்குதலுக்கு இலக்காகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் மற்றொரு நடுத்தர வயது யுவதி நிலத்தில் வீழ்த்தப்பட்டுள்ளார். இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

**பிரான்ஸில் கலைந்து செல்ல மறுத்ததில் கலவரம்**

வன்னியில் தமிழினப் படுகொலையை நிறுத்தக் கோரி பிரான்ஸின் பாரீஸ் நகரத்தில் உள்ள அன்வலிட் என்ற இடத்தில் அதாவது பிரான்ஸின் வெளிநாட்டு வெளிவிவகார அமைச்சு அமைந்துள்ள பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட கவனயீர்ப்பு நிகழ்வு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் ஒன்று கூடிய தமது உரிமை முழக்கங்களைத் தொடர்ந்து வானதிரக் கூவிப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

தாய் நில உறவுகள் கொன்று குவிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த வேளையில் தமிழ் மக்களுக்கான ஒரு நிரந்தரத் தீர்வை பிரெஞ்சு அரசு தேடித்தரும் வரைக்கும் இவ்வாறான கவனயீர்ப்பு நிகழ்வு பாரிஸ் நகரத்தின் நாடாளுமன்ற வளாகத்தில் தொடர்ந்து நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே நேரம் செவ்வாய்க்கிழமை காலை வேளையில் அவ்விடத்திற்கு விரைந்து வந்த பொலிஸார் குறிப்பிட்ட இடத்[illegible]ந்து கவனயீர்ப்பு நிகழ்வை மேற்கொள்ள வேண்டாம் என எச்சரித்தபோதும் மக்கள் அவ்விடங்[illegible]லைந்து செல்ல மறுத்தனர் இதன் போது அங்கு கலவரம் ஏற்பட்டது.

**இத்தாலியில் வீதியை மறித்துப் போராட்டம்**

இத்தாலி பலெமோ நகரில் அமைந்துள்ள சிசீலி மாநில முதல்வர் அலுவலகம் முன்பாக 500 இற்கும் மேற்பட்ட மக்கள் தடைகளையும் மீறி பிரதான வீதிகளையும் மறித்து போராட்டத்தை முன்னெடுத்தனர்.

வன்னியில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் எறிகணை மற்றும் விமானத் தாக்குதல்களையும் எறிகுண்டு நச்சுவாயு வீச்சுக்களையும் நிறுத்தக் கோரியும் போரை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்த சர்வதேசம் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என வலியுறுத்தியும் இத்தாலி பலெர்மோ நகரில் அமைந்துள்ள சிசீலி மாநில முதல்வர் அலுவலகம் முன்பாக 500இற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் திரண்டனர். தடைகளையும் மீறி வன்னி அவலங்களை வெளிக்கொண்டு வரும் பதாகைகளை தாங்கி பிரதான வீதிகளையும் மறித்து போராட்டத்தை முன்னெடுத்தனர்.

பொலிஸார் மக்களை கலைந்து செல்லுமாறு வலியுறுத்தியும் மக்கள் இறுதிவரை அவ்விடத்தில் நின்று தமது உணர்வுகளை வெளிப்படுத்தினர்.

இப்போராட்டம் தொடர்சியாக சிசீலி மாநில அலுவலகம் முன்பாக இன்று முற்பகல் 1.30 தொடக்கமும் இத்தாலியின் பிரதான தொலைக்காட்சி நிறுவனமானராய் முன்பாக நாளை வெள்ளிக்கிழமை காலை 9:00 தொடக்கமும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

* கனடா ஒட்டாவாவில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் செவ்வாய்க்கிழமை வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
* நெதர்லாந்தில் நாடாளுமன்றத்துக்கு முன்னால் தமிழ் மாணவர்கள் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
* நோர்வேயிலும் பிரதமர் அலுவலகத்தின் முன்பாக செவ்வாய்க்கிழமை பெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.
* ஜெனிவாவில் ஐ.நா. முன்றலில் சுவிஸ் வாழ் தமிழர்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தினை நடத்தினர். (அ)

## நேற்றைய ஆட்லறி,....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிகளை நோக்கி நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை தொடக்கம் பிற்பகல் வரை படையினர் ஆட்லெறி எறிகணை, பல்குழல் வெடிகணை, ஆர்பிஜி உந்து கணை, தொலைதூர துப்பாக்கிச் சூட்டு மற்றும் வான் தாக்குதல்களை நடத்தியுள் ளனர் என்று இணையத்தளத் தகவல்கள் தெரிவித்தன. நேற்றைய சம்பவங்கள் குறித்துஇணையத்தளங்கள் பின்வரும் தகவல்களைவெளியிட்டன. இதில் 31 பொதுமக் கள் பலியானார்கள் செய்யப்பட்டுள்ளதுடன் 75-க்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் 3 குழந்தை களும் 11 சிறுவர்களும் அடங்குவர் அவர்களில் அடையாளங் காணப்பட்டோர் பேர் விவரம் வருமாறு:

இராசமாணிக்கம் ஜோதிகா (8 மாத குழந்தை),சிவசக்தி தேவதாசன் (வயது 02), பாஸ்கரன் லோகேஸ்வரன் (வயது 2 வருடம் 6 மாதம்), சேதுகாவலன் மயூரதன் (வயது 05), தர்மேந்ரன் (வயது 06),தர்மேந்திரன் கார்த்திகா (வயது 06),கந்தசாமி தனுசன் (வயது 08),லோகநாதன் லோஜிதா (வயது 09),டினோசி (வயது 09),லோகநாதன் திசா (வயது 09)முருகானந்தம் தர்மினி (வயது 12),பாக்கியராஜா மதுசனா (வயது 13) முத்துலிங்கம் கம்சனா(வயது 14)தர்மராஜ் கிருத்திகா (வயது 14),சோதி (வயது 48),சிவராசா (வயது 35),பஞ்சலிங்கம் தனஞ்சிநாத் (வயது 28),ம.சந்திரன் (வயது 69)

சிவகுருநாதன் புனிதலட்சுமி (வயது 57),இ.சுபாசினி (வயது 30),தில்லைநாதன் சுமதி,(வயது 38),லோகநாதன் ஹேமா (வயது 32),சிவசுப்பிரமணியம் பாஸ்கரன் (வயது 34),செ.சுடரேந்தி (வயது 33)தர்மலிங்கம் வீரசிங்கம் (வயது 54),இந்திரராஜா (வயது 42),கேசவன் புனிதமலர் (வயது 32),செல்வரட்ணம் செல்வமணி (வயது 38)கந்தையா கருணாகரன் (வயது 29) சிவபாதராஜா பார்வதி (வயது 42). (அ)

# விரிவுரையாளர் ரவீந்திரன் தொடர்பான விடயம் ஜனாதிபதி கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது

## துணைவேந்தர் தகவல்

யாழ்ப்பாணம், ஏப். 9

கொழும்பில் கடந்த 24 ஆம் திகதி காணாமற்போயுள்ள யாழ்.பல்கலைக்கழக புவியியல்துறை விரிவுரையாளர் செல்வராசா ரவீந்திரன் தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளதாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தெரிவித்தார்.

ரவீந்திரன் விடுதலை தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

ரவீந்திரன் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், உயர்கல்வி அமைச்சுச் செயலாளர், மானியங்கள் ஆணைக் குழுத்தலைவர், மொறட்டுவ பல்கலைக் கழக துணை வேந்தர், பொலிஸ்மா அதிபர் உட்பட அனைத்து தரப்பினருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ரவீந்திரன் உயர்பட்ட படிப்பு விடுமுறையில் மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் நகர திட்டமிடல் முதுமாணிப் பட்டப்பின் படிப்பை மேற்கொண்டு வருகின்றார்.

மொறட்டுவ பல்கலைக்கழக துணைவேந்தருடன் தொடர்புகொண்ட போது, குறித்த தினத்தில் மாலை 4.30 மணிவரை ரவீந்திரன் வகுப்பில் இருந்ததாகவும் மறுநாள் காலை 9 மணிக்கு பீடாதிபதியுடன் தனது ஆய்வுக் கட்டுரை தொடர்பாக சந்திப்பதற்கு ஒழுங்கு செய்திருந்ததாகவும் அறியத்தந்தார்.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், மாணவர் ஒன்றியம் ஆகியன இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி அவர்களுக்கு தெரியப்படுத்தி ரவீந்திரன் எங்குள்ளார் என்பதை கண்டு கொள்வதில் உதவுமாறு கேட்டுள்ளனர். இரண்டு வாரங்களாகியும் அவரது நிலை பற்றி அறியமுடியாதுள்ளமை கவலையளிப்பதாக உள்ளது. இப்பொழுது ஜனாதிபதி அவர்களுக்கு நானும் ஒரு வேண்டுகோளை விடுத்துள்ளேன்- என்றார் அவர்.

(அ-சி)

# கப்பலில் எடுத்துவரப்படும் கோதுமை மா, சீனி செயலகத்தினால் இனி தனியார் வர்த்தகர்களுக்கும்

குடாநாட்டுக்கு கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ள சீனி, கோதுமை மா ஆகியன தனியார் வர்த்தகர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

ஒருகிலோ சீனி 78 ரூபாவாகவும், கோதுமைமா 69 ரூபாவாகவும் தனியார் வர்த்தகர்களுக்கு வழங்கப்படவுள்ளது என்று அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்துள்ளார்.

சீனியின் ஆகக்கூடிய சில்லறை விற்பனை விலையாக 81 ரூபாவும், கோதுமை மாவுக்கு ஆகக்கூடிய சில்லறை விற்பனை விலையாக 72 ரூபாவும் எனவிலைநிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றும் அரச அதிபர் அறிவித்துள்ளார். நிர்ணயம் செய்யப்பட்டுள்ள விலைக்கு கூடுதல் விலைக்கு விற்பனை செய்யக் கூடாது என்றும் மொத்த விலைக்கு அனுமதி இல்லை என்றும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

# பாதுகாப்பு வலயத்தில் இரத்தக்களரி........

லண்டனில் 'த கார்டியன் பத்திரிகைக்கு இதனைத் தெரிவித்துள்ள ஜோன் ஹோம்ஸ், பெருமளவு மக்கள் குவிந்துள்ள சிறிய பகுதியில் தாக்குதலை மேற்கொள்வதன் மூலம் ஏற்படக்கூடிய உயிரிழப்புகள் சர்வதேச அளவில் அரசின் நம்பகத்தன்மையைப் பாதிக்கும் என்றும் எச்சரித்துள்ளார்.

மோதல் நடைபெறும் பகுதியில் சிக்கியுள்ள மக்கள் அங்கிருந்து வெளியேறுவதா இல்லையா என்பதை மக்கள் தாங்களே தீர்மானிக்க அனுமதிக்குமாறும் விடுதலைப் புலிகளைக் கேட்டுக்கொண்டுள்ள அவர், இதுகுறித்து மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

லண்டன் தமிழ் மக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களைச் சந்தித்துக்கொண்டுள்ள அதேவேளை, இலங்கையின் வடபகுதிக் கடற்கரையோரங்களில் இரத்தக்களறி ஏற்படுவது அதிகளவானதாகவுள்ளது.

இலங்கை இராணுவம் விடுதலைப் புலிகளை மிகச் சிறிய பகுதிக்குள் தள்ளியுள்ளது. இதன் காரணமாக எவ்வித துப்பாக்கிப் பிரயோகமோ அல்லது ஷெல்வீச்சோ தவிர்க்க முடியாதபடி பாதுகாப்பு வலயத்திற்குள் சிக்கியுள்ள ஒரு லட்சத்து 50 ஆயிரம் முதல் ஒரு லட்சத்து 90 ஆயிரம் வரையிலான மக்களுக்கு மத்தியில் இழப்புகளை ஏற்படுத்தும்.

இரு தரப்பினதும் தாக்குதல் காரணமாக நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். சரியான புள்ளி விவரத்தையும், தாக்குதலை மேற்கொண்டது யார், எப்போது என்பதையும் உறுதி செய்வது சாத்தியமற்றதாகவுள்ளது.

பொதுமக்கள் வெளியேறுவதற்கு விடுதலைப் புலிகள் அனுமதி மறுப்பது தெளிவானவிடயம்.எனினும் பலர் தப்பியுள்ளனர்.

**இரு தரப்புகளும் இறுதிப்போருக்கு தயாராகக்கூடும்**

இறுதிப் போருக்கு இரு தரப்பும் தயாராகலாம் என நான் அச்சமடைகிறேன். இது மிக மோசமான நிலைமையாகும்.

நீண்டகால, முழுமையான யுத்த நிறுத்தத்துக்கு இணங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

பாதுகாப்பான விதத்தில் பொதுமக்களை வெளியேற்றுவதற்கான ஒரேவழி, தற்காலிக மனிதாபிமான அமைதி நிலையே.

இதன்போது மனிதாபிமான பணியாளர்களும் நிவாரணப் பொருள்களும் மோதல் நடைபெறும் பகுதிகளுக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். அங்கிருந்து வெளியேற விரும்புபவர்களுக்கு அதற்கான அனுமதி வழங்கப்பட வேண்டும்.

இரு தரப்புக்கும் இதனைச் செய்ய வேண்டிய கடப்பாடுள்ளது.

மோதல் நடைபெறும் பகுதிகளில் இருந்து வெளியேற அங்குள்ள மக்கள் விரும்பவில்லை என்றும் அவர்கள் தமது சுய விருப்பத்தின் பேரில் தம்முடன் வந்துள்ளனர் என்றும் மேலும் அர[illegible] என அஞ்சுகின்றனர் என்றும் விடுதலைப் புலிகள் தெரிவிக்கின்றனர்.

எனினும் தப்பியோடும் மக்கள் மீது விடுதலைப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர் என்றும் மீன்பிடியை மட்டுப்படுத்தியுள்ளனர் என்றும் மக்கள் தப்பிச்செல்வதற்குப் பயன்படுத்தக்கூடிய படகுகளை சேதப்படுத்தியுள்ளனர் என்றும் பொதுமக்களை அவர்களது விருப்பத்திற்கு மாறாகப் போர்புரிய நிர்ப்பந்திக்கின்றனர் என்றும் தகவல்கள் வெளியாகின்றன.

**வெளியேற விரும்புகின்றனரா என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும்**

மோதலில் சிக்கியுள்ள மக்கள் தாங்கள் தொடர்ந்து தங்கியிருக்கவா அல்லது வெளியேறவா விரும்புகின்றனர் என்பதை அவர்களே தீர்மானிக்க அனுமதிக்க வேண்டும். இதனை விடுதலைப் புலிகளுக் குத் தெளிவுபடுத்தியுள்ளோம்.

விடுதலைப் புலிகள் உண்மையிலேயே தமிழ் மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டுள்ளனர் என்றால் பொதுமக்களின் தேவையற்ற இந்தத் துயரத்தை முடிவுக் குக் கொண்டுவர உதவவேண்டும்.

மோதல் நடைபெறும்போது கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துவதில்லை என்ற உறுதிமொழியை இலங்கை அரசு பின்பற்ற வேண்டும்.

தற்காலிகமோதலைத் தவிர்ப்பதற் கான பேச்சுகள் இடம் பெறும் வேளையில் இறுதித் தாக்குதலொன்றைமேற்கொள்வதை ஒத்திவைக்க வேண்டும். சிறிய பகுதியில் பெருமளவு மக்கள் அடைபட்டுள்ள நிலையில் இராணுவ நடவடிக்கை என்பது பெருமளவு பொதுமக்களுக்கு உயிரிழப்புகளையும் காயங்களையும் கொண்டுவரலாம்.

**அரசு நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும்**

மேலும் சர்வதேச ரீதியில் அரசின் நம்பகத்தன்மையை அது பாதிக்கும். மேலும் நல்லிணக்கம் காணவேண்டிய தேசிய குழுக்களுடனான நம்பிக்கையும் பாதிக்கப்படும்.

இவ்வாறான முக்கியமான தருணத்தில் சுதந்திர மனிதாபிமானப் பணியாளர்கள் மேலும் உதவிகளைக் கொண்டுவர அனுமதிக்கப்பட வேண்டும். நிலைமையை மதிப்பிடவும் மக்களுக்குத் தமது விதி யைத்தாமே தீர்மானிக்க வும் அனுமதிக்க வேண்டும்.

விநியோகங்கள் மற்றும் மனிதாபி மானப் பணியாளர்களுக்கான அனுமதி வழங்கப்படாத பட்சத்தில் நோய்கள், சிகிச்சையளிக்கப்படாத காயங்கள் மற்றும் பட்டினியால் பலர் இறக்கலாம்.

அரசு தங்களை மோசமாக நடத்தும் என பாதுகாப்பு வலயத்தில் உள்ள பல பொதுமக்கள் கவலை கொண்டுள்ளனர் என்பதை அரசு ஏற்றுக்கொள்வதன் மூலம் நெகிழ் வுப் போக்கை வெளிப்படுத்த வேண்டும். பொதுமக்களின் பாதுகாப்பு நன்கு உறு திப்படுத்தப்பட்டுள்ளதைத் தெளிவாகத் தெரியப்படுத்த வேண்டும். சர்வதேச தராதரத்திற்கு அமைய உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் நடத் தப்படவேண்டும். (அ-சி)


**யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் வரைவுள்ளது 31.12.2005 இல் உள்ளபடியான மீதிகளை உறுதிப்படுத்தல்**

31.12.2005ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு நடைபெற்றுக் கொண்டிருப்பதால், யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துடன் தொடர்புடைய அங்கத்துவ சங்கங்கள் - தனியார் வருமதி/சென்மதி விவரங்களை உறுதிப்படுத்தாதிருப்பின் 20.04.2009க்கு முன் சமாசத்துடன் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்தி அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 111, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

பொதுமுகாமையாளர்,
யா.மா.வி.நு.கூ.ச.சமாசம்.


**கண்ணீர் அஞ்சலி**



சகோதரமாய் வந்துதித்து உண்டு மகிழ்ந்து வழிகள் பலகாட்டி எம்மை விட்டுப் பிரிந்த

**கனகராசா பாக்கியம்** (காளி கோயிலடி, சங்கானை)

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

திருமதி சபாரத்தினம் அன்னலட்சுமி குடும்பத்தினர்.

பெரியவிளான், இளவாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு- யாழ் அரச விமான சேவை அமைச்சர் டக்ளஸின் முயற்சியால் ஆரம்பம்

கொழும்பு, ஏப்.9

யாழ்ப்பாணத்துக்கு பயணிகள் போக்கு வரத் தில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைக் கவ னத்திற்கொண்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக இலங்கை விமானப் படை யினரின் கொழும்பு - யாழ்ப்பாணம் பய ணிகள் விமானசேவை ஆரம்பிக்கப்பட் டுள்ளது.

தற்சமயம் யாழ். - கொழும்பு பயணிகள் விமான சேவை முற்றுமுழுதாகத் தனியார் வசம் இருப் பதன் காரணமாக விமானப் பயணத்திற்குப் பெருந்தொகை செலவுகளை மேற்கொள்ளவேண் டியிருப்பது ஒருபுற மிருக்க, தொடர்ச்சியான அலைச் சல் மற்றும் காலதாமதம் போன்ற பல சிரமங் களைப் பொதுமக்கள் எதிர்நோக்கியுள்ளனர். அத னைவிட யாழ்ப்பாணம் செல்வதற்காக பெரும் எண்ணிக்கையான பொதுமக் கள் கப்பல் சேவை யினை எதிர்பார்த்து திரு கோணமலையிலும் பலத்த சிரமங்களுக்கு மத்தியில் தங்கியுள்ளனர்.

மேற்படி விடயங்கள் குறித்து பொது மக்களும் பல்வேறு தரப்புக்களும் தொடர்ச்சியாகத் தெரி யப்படுத்தியும், முறைப்பாடுகளை மேற்கொண் டுள்ள நிலையிலும் அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா இது தொடர்பாக ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சு மற்றும் விமானப்படை உயர் அதிகாரி க்ள் ஆகியோருடன் பேச்சுகளை நடத்தி மேற் கொண்ட நடவடிக்கையினை அடுத்து இலங்கை விமானப்படைப் போக்குவரத்து விமானத்தினூ டாகப் பயணிகள் விமான சேவை உடனடியாக ஆரம் பிக்கப்பட் டுள்ளது எனத்தெரிவிக்கப்படுகிறது.

யாழ். - கொழும்பு பயணிகள் விமான சேவைக்கு ஒருவழிக் கட்டணமாக நாலாயிரத்து நானூறு ரூபா (4400/-) அறவிடப்படும். ஏனைய செலவுகளைக் கருத்திற் கொண்டு ஐநூறு ரூபா (500/-) ரூபா மேலதிக கட்டண மாகவும் மொத்தம் நாலா யிரத்து தொளாயிரம் ரூபா (4900-) அறவிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள விமா னப் படை விமானங்கள் ஊடான யாழ் - கொழும்பு விமானசேவைப் பதிவுகளை இல. 61, இசிப்பத் தான மாவத்தை, கொழும்பு - 5 இல் அமைந்துள்ள சமூக சேவைகள் அமைச்சுப் பணிமனையில் மேற் கொள்ள முடியும். மேலும் 0112-584322 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாகவும் தமது பதிவு களை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப் படுகிறது. (சி)

## வவுனியா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வசதிகளையும், மாணவர்களுக்கு பாடசாலை வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது என் றும், எனினும் மேலும் வசதிகள் அங்கு தேவைப் படுகின்றன என்றும், நீல் புஹூனே கூறியுள்ளார்.

இலங்கை அரசால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பாதுகாப்பு வலயத்துக்குள் சிக்கியிருக்கும் பொது மக்களின் பாதுகாப்பு குறித்து ஐக்கிய நாடும் ஆழ்ந்த கவலையும் கரிசனையும் கொண்டுள்ளது என்றும் அவர் பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

ஒரு குறுகிய காலத்துக்காவது இலங்கை அரசு போர் நிறுத்தம் அறிவிக்குமாயின் அந்த காலகட்டத்தில் அங்கிருந்து பொதுமக்கள் பாது காப்பாக வெளியேற வழிசெய்யும் என்றும், அப்படி இலங்கை அரசு முன்வந்தால், வெளி யேற விரும்பும் பொதுமக்களை விடுவிக்க விடு தலைப் புலிகளை கோருவோம் எனவும் நீல் புஹூனே கூறியுள்ளார்.

பாதுகாப்பு வலயத்துக்குள் இராணும் புக நேரிட்டால் அங்கு பெரும் பாதிப்புகள் ஏற்படக் கூடும் என்று தாங்கள் அஞ்சுவதாகவும் இலங் கையிலுள்ள ஐக்கிய நாடுகளில் வதிவிடப் பிரதி நிதி நீல் புஹூனே தெரிவித்துள்ளார். (அ)

## ஆயுதத்தைக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

புலிகள் சரணடைவதற்கான இறுதி வாய்ப்பு இதுவே'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் சரணடைவதற்கான கால எல்லை குறித்து அவர் எதனையும் தெரிவிக்கவில்லை.

## பாதுகாப்பு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெடிப்புச் சத்தங்கள் நேற்று புதன்கிழமை கேட் டன என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

விடுதலை புலிகள் தமது கட்டுப்பாட்டிலுள்ள மக்கள் வெளியேற முற்பட்ட சமயம் அவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர் எனவும் பாதுகாப்பு படையினர் சந்தேகிக்கின்றனர் எனவும் தேசிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.(அ-சி)

## அடிகாயங்களு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுகாமம் கிராமத்தினை பூர்வீகமாகக் கொண்ட சீனிமுகம்மது உசனார் (வயது-47) எனும் 10 பிள் ளைகளின் தந்தையே இவ்வாறு கொலைசெய்யப் பட்டவராவார்.

மூன்று தினங்களுக்கு முன் இவர் காணா மற்போகவே பொதுமக்கள் அதிரடிப்படை யினரின் உதவியுடன் தேடுதல் நடத்தினர். இந் நிலையில் நேற்றுப் புதன்கிழமை பகல் இவர் உறுகாமம் மஞ்சையடிச் சோலை எனும் கிராமத் திலிருந்து அடிகாயங்களுடன் சடலமாக மீட்கப் பட்டார் என ஏறாவூர்ப் பொலிஸார் தெரிவித்தனர்.

## பாணின் விலை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருகோணமலையில் இருந்து எடுத்து வரப்பட்ட கோதுமை மா ஒரு கிலோ 69 ரூபாவுக்கு பேக் கறிகளுக்கு வழங்கப்பட் டுள்ளது என்றும்-

அதனால் பாணின் விலை குறைக்கப் படு வதாகவும் -அரச அதிபர் தெரிவித்தார்.

ஏனைய பேக்கறி உற்பத்திப் பொருள்களின் புதிய விலைகள் விரைவில் நிர்ணயம் செய்யப்பட்டு அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.(1)

## வன்னியிலுள்ள......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமீபத்திலும் மோதல் நடைபெறும் பகுதிகளில் சிக் கியுள்ள மக்களின் மனித உரிமைகளைப் பாது காப்பதன் அவசியம் குறித்து ஜனாதிபதியுடன் பேசியுள்ளேன்.

பொது மக்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கும் பாதுகாப்பு வலயங்களுக்கு ஆபத்து ஏற்படாமலி ருப்பதற்குமான நடவடிக்கைகளை இலங்கை அரசு எடுக்கும் என நான் மீண்டும் எதிர்பார்க்கிறேன்.

அதேவேளை இந்த மக்களை யுத்தம் நடை பெறும் பகுதிகளிலிருந்து சுதந்திரமாக வெளி யேறுவதற்கு விடுதலைப் புலிகளும் இலங்கை அரசிற்கு தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும். இவை அடிப்படை மனித உரிமை, மனிதாபிமான விடயங்கள்- என்று அவர் தெரிவித்தார்.(அ-சி)

## புல்மோட்டைக்கு.....

மூலம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் அனு சரணையுடன் 536 பேர் நேற்று புல்மோட்டைக்கு கொண்டு வரப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கொண்டுவரப்பட்டோரில் மூவர் உயிரிழந்துள்ளனர் என்றும் அதிகாரிகள் குறிப் பிட்டுள்ளனர். காயங்களுக்கு இலக்கானோர், நோயாளர்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் அவர்களது உறவினர்கள், உதவியாளர்கள் போன்றோ ரும் இந்தக் கப்பல் மூலம் கொண்டுவரப்பட்டுள் ளனர் என்று அறிவிக்கப்பட்டது. (அ-சி)

## இலங்கையில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிக்கியுள்ளனர். தாக்குதலை இலங்கை இராணு வம் தீவிரப்படுத்தி வருகிறது.

இந்நிலையில், தமிழர்களைக் காப்பாற்ற உட னடியாக நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி சென் னையில் முதல்வர் கருணாநிதி தலைமையில் இன்று பிரம்மாண்டமான பேரணி நடக்கிறது. மாலை 4 மணிக்கு தொடங்கும் பேரணி மன்றோ சிலையிலிருந்து சேப்பாக்கம் வரை நடக்கிறது. இந் தியா உள்ளிட்ட உலக நாடுகளின் உருக்கமிகு குரலை மதித்து, இலங்கை அரசு போரை நிறுத்தவேண் டும் என வலியுறுத்தி நடக்கும் பேரணியில், கட்சி வேறு பாடின்றி அனைவரும் கலந்துகொள்ள வேண்டு மென்று தி.மு.க. வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதனிடையே, பிரதமர் மன்மோகன் சிங்குக் கும், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திக்கும் கருணாநிதி அவசர தந்தி ஒன்றை அனுப்பியுள்ளார்.

இலங்கையில் தமிழினம் ஒட்டுமொத்தமாக அழிக்கப்படுவதில் இருந்து அவர்களை காப் பாற்ற வேண்டும். இலங்கை அரசு போர் நிறுத்தம் செய்து அமை திப் பேச்சு தொடங் குவதை மத்திய அரசு உறுதிப்படுத்தவேண் டும். என்று கருணா நிதி தமது தந்தியில் கோரி யுள்ளார். (அ-சி)

## வவுனியா ரயில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர் மதவாச்சி வரையில் மட்டுப்படுத்தப் பட்டிருந்தது.

நேற்று காலை 5.45 மணிக்கு கொழும்பு கோட் டையிலிருந்து புறப்பட்ட யாழ் தேவி கடுகதி ரயில் முற்பகல் 10.10 மணிக்கு வவுனியாவை அடைந்தது. நேற்று மாலை வுவனியாவிலிருந்து புறப்பட்டு கொழும்பு கோட்டையை வந்தடைந் தது என ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

இன்று முதல் தினமும் காலை 5.45 மணிக்கு யாழ்.கடுகதி வவுனியா வரை சேவையில் ஈடு படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.(அ-சி)

## அரச அலுவல.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈழத் தமிழர்களை அழிவிலிருந்து காப்பாற் றக் கோரியும், இந்திய அரசின் துரோகத்தைக் கண்டித்தும் ஈழத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பில் நேற்று சென்னை மாவட்ட ஆட்சியர் அலு வலகம் அருகே கண்டன ஆர்ப்பாட்டம் நடை பெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்துக்கு ஈழத்தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பழ. நெடுமாறன் தலைமை தாங்கினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பா.ம.க. நிறுவுனர் இராமதாஸ் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா. பாண்டியன், அக்கட்சியின் மூத்த தலைவர் நல்லக்கண்ணு, பா.ஜ.கட்சியின் தேசிய செயலாளர் திருநாவுக்கரசர், திருமதி தமிழிசை சவுந்திரராசன், பஷீர் அகமது, தாவூத் மியாகான், தியாகு, மணியரசன் உள்ளிட்ட பெருந்திரளான இன உணர்வாளர்களும் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தில் பேசிய வைகோ, டில்லியில் உள்ளவர்கள் தமிழகத்தைக் கலவர பூமியாக வைத்திருக்கத் திட்டமிட்டிருக்கின்றனர் எனக் குற்றம் சாட்டினார்.


**விற்பனைக்கு**
மலிவான விலையில் CD க்கள், கொப்பிகள், றாக்கைகள் அத்துடன் அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: பீட்டர் வீடியோ,
இல.43, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

**மீண்டும் ஒரு புதிய பிரிவு**
A/L 2011
கலை, வர்த்தக, கணித, உயிரியல் பிரிவுகள்.
ஆரம்பம்:- 11.04.2009 சனி காலை 8மணி
★புதிய மாணவர்களுக்கு ஆரம் பத்தில் இருந்து கற்பிக்கப்படும்.
NEC
Clock Tower Road, Jaffna

கலை, வர்த்தகப் பிரிவுகள் A/L 2011
**லோகா அக்கடமி**
எமது நிறுவனத்திற்கேயுரிய ஆசிரியர் குழாம்
வர்த்தகப் பிரிவு: பொருளியல் - திரு.அருணன்; கணக்கியல் - திரு.சிவராசா; வர்த்தகம் - திரு.சிவராசா; பொது ஆங்கிலம் - திரு.ஞானபரன்
கலைப் பிரிவு: தமிழ் - திரு.நவநீதகிருஸ்ணன்; அளவையியல் - திரு.B.A.S.லோகா; இ.நாகரிகம் - திரு.நவநீதகிருஸ்ணன்; புவியியல் - திரு.நோகிலன்
A/L 2011 பிரிவு II ஆரம்பம் - 11.04.2009
மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.
சட்டநாதர் சிவன்கோவிலடி, நல்லூர். நிர்வாகி.

**BARATHY** சித்தன்கேணி
O/L Day Class நாளை ஆரம்பம்
10.04.2009 வெள்ளி காலை 8 மணி
நீங்கள் நன்கறிந்த எமது வழமையான ஆசிரியர் குழுவினால் உங்கள் அனுமதிகளை நாளையில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.
குறிப்பு: சென்ற ஆண்டு போல இவ்வாண்டும் 100 மாணவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.
அனுமதிக்கு முந்துங்கள்.

**வந்துவிட்டது வெற்றித்தேர்வு**
2009: தரம்: 5, 4, 3
திருமலை கணேசலிங்கம் அவர்களின்
சாதனை படைத்த வெற்றித்தேர்வு
தரம்: 5- 1 2 3 4 5 6 7
தரம்: 4- 1 2 3 தரம்: 3- 1 2 3
புத்தகசாலைகளில் பதிவு செய்யாமலே பெறலாம்
பிரபலமான அக்கடமி ஒன்றில் தரம்:4,5 வகுப்பிற்கு மற்றும், English கற்பிக்கக்கூடிய ஆண் ஆசிரியர் தேவை
(College of Education or Primary Trained)
0773126807, 0212229016

A/L 2011
ஆரம்பம்
11.04.2009
சனி
யூனிவேர்சல்

**Abans Retail(Pvt.) Ltd**
**பதவி வெற்றிடம்** (Abans Showroom Managers)
Abans நிறுவனம் யாழ்.மாவட்டத்தில் ஆரம்பிக்க இருக்கும் காட்சி அறைகளுக்கு முகாமையாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
* அடிப்படைத் தகைமை : Degree/ Diploma
* பாதுகாப்பு வைப்பு: ரூ.350,000/=
* வயது எல்லை: 23 -35 (ஆண்/ பெண்)
* விண்ணப்ப முடிவு திகதி: 15.04.2009
* விண்ணப்பங்களை 10,11,15 ஆம் திகதிகளில் பிற்பகல் ஒரு மணிக்கு முன்பாக கீழ்வரும் முகவரியில் நேரடியாக சமர்ப்பிக்கவும்.
* முகவரி - 31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்,
தொ.பே.: 021 4590000
Abans

**புத்தாண்டை முன்னிட்டு**
New Year Special Offer
60%
விடுமுறைக்காலத்தை பயன்னுள்ளதாக்க விசேட கட்டணச்சலுகையில் கணினிக்கற்கை நெறிகள்
Diploma in Microsoft Office
Dip in Computerized Accounting
Dip. in Video Production & Multimedia
Adv. Dip. in Hardware & Networking
சிறார்களுக்கான JUNIOR DIPLOMA கற்கை நெறிகள்
பாடசாலை மாணவர்களுக்கான
Internet and E-mail
குறுங்கால விசேட பிரிவுகள்
online வகுப்புக்கள்
100%
புதிய பிரிவுக்கான பதிவுகள் இன்று முதல் ஆரம்பம்
முழுமையானதும் தரமானதுமான கணினி கல்விக்கு
DMI COMPUTER EDUCATION
NO. 113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel: 021-222 4403

Only Personal Classes
கணக்கீடு
A/L 2010 & 2011
BY: Mr.T.LINTUS
(B.com, H.N.Dip.in.Acc)
(Teacher)
Temple Road, Jaffna
Accounting Package
வகுப்புகள் முன்னணி கணனி நிறுவனங்களில் நடைபெறுகின்றன.
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
STR
021 222 9397

**Subra (14)**
சித்தன்கேணி - வட்டுக்கோட்டை
O/L Day Class
இரு இடங்களிலும்
எமது விசேட ஆசிரியர் குழு
09.04.2009
வியாழன் காலை 7 மணி

**A.T.C. INSTITUTE INUVIL**
32 ஆண்டுகள் தரமான ஆசிரியர்களின் சேவையில்
O/L Day Class
கணிதம், விஞ்ஞானம் - திரு.இரா.அருட் செல்வம்
தமிழ் - திரு.விஜய் வரலாறு - திரு.விக்கி
சமயம் - திரு.சதா ஆங்கிலம் - திரு.சூரி
வர்த்தகம் - பிரபல ஆசிரியர்
ஆரம்பம்:- 10.04.2009 காலை 8 மணி.
அனுமதிக்கு முந்துங்கள்.

நாளை ஆரம்பம்
**விக்னா கல்வி நிறுவனம்**
(இரு இடங்களிலும்)
தலைமையகம், இல.52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
கிளை நிறுவனம், இல.417, கே.கே.எஸ். வீதி, யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகில்
O/L DAY CLASS பிரிவு 1
நாளை ஆரம்பம்: 10.04.2009 Friday (8.30 -2.00)
* இம்முறையும் பிரிவு 06 மட்டுமே. * அன்று தொட்டு இன்று வரை O/L DAY CLASS க்கு பிரபல்யம் வாய்ந்த ஒரே நிறுவனம் * தூரத்து மாணவர்களுக்கு விடுதி வசதி செய்துதரப்படும்.
* சைக்கிளில் வரும் மாணவர்கள் சகல பாதைகளாலும் வரலாம்.
(ஆரியகுளம் சந்தி, சிறாம்பியடி லேன், ஸ்ரான்லி வீதி)


**ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி**



பிறப்பு 18.01.1942

இறப்பு 08.04.2003

அமரர்

நாராயணபிள்ளை **சிவசுப்பிரமணியம்**

நெஞ்சுக்குள்ளே எம்மை வைத்து
நேசமூட்டி வளர்த்து வந்தீர்
தஞ்சமாய் உம்மை நம்பி
தழைக்க வைத்தீர் பூமிதனில்
பஞ்சதன் மேல் தீயைப் போல
மனம் பற்றவிட்டு ஏன் மறைந்தீர்?
ஆண்டுகள் ஆறு ஆகிடினும்
ஆறிடாது உம் பிரிவுத்துயர்
மாண்டுபோனது உம் உடல்தான்
மறைந்திடாது ஞாபகங்கள்
வேண்டுகின்றோம் இறைவனிடம்
உமது ஆன்மா சாந்தி பெற!

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உசன், மிருசுவில்.

இங்ஙனம், குடும்பத்தினர்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.04.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org